V6 NO. 32 17 Ag 1983

JL
211, N28 KN
N33·6·32
189156

தனிப்பிரதி விலை. அணா 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ஷு ஆகஸ்ட் மீ 17உ [No. 32

19 JAN 1934

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 597
2. தமிழ்ப் பாடம்
அஷ்ட பிரபந்தம்—திருவேங்கடமாலை 599
3. கலித்தொகை (பாலைக்கலி, 21)
T. A. கனகசபாபதி முதலியார் 601
4. காற்றுமழை (அங்கம் 3. களம் 2.)
Shakespeare's Tempest 602
5. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 7-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 604
6. அப்பர் (64-கலை, வியாகரணம்-செய்யுமென் முற்று.)
E. N. தணிகாசல முதலியார், B.A., B.L., 606
7. கம்பராமாயணம் (சடாயு வுயிர்நீத்த படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 607
8. பொதிகை நிகண்டு (மா-மி-மீ.)
S. வையாபுரிப் பிள்ளை B.A.B.L. 611
9. மலர்வனம்—தீயினுள் திங்கள், "மதுகரம்" 611
10. வர்த்தமானம் 612

## கலாநிலயம்

189156

### இதயமும் உயிரும்.

உலகம் இன்னும் நையாமல் உய்யவேண்டுமாயின், பெரியோரும் சிறியோரும் முதியோரும் இளையோரும், ஆண்பாலோரும் பெண்பாலோரும், செல்வமுடையோரும் வறியோரும், யாவரும் எங்கெங்கும், இரவுபகல் கலையின்பால்தம் கருத்தத்தனையும்செலுத்தித் தீரவேண்டும். வேறோர் உபாயமில்லை. மற்றவெல்லாம் வீணாவதுடன் நில்லாமல் விபரீதமும்ஆகிவிடும். "உலகத்தின் நன்மைக்காக உழைக்கின்றோம்" என்று நெஞ்சறியப் பொய்புகன்று தம்முடைய அற்ப இலாபங்களையே தேடிக்கொள்வதற்கு மிக முயன்று திரிகின்ற புல்லியோர் போகட்டும், அவர்களை நாமிங்கு ஒரு பொருளாக வைத்துப் பேசவில்லை. "உலகத்தைப் பற்றி எமக்கொன்றும்ஆகவேண்டியதில்லை. எங்கள் காரியத்தையேதான்நாங்கள்பார்த்துக் கொள்கின்றோம்" என்று விளம்பிப் பற்பல உத்தியோகங்களிலும், தொழில்களிலும் ஈடுபட்டிருக்கின்றவர்களும் வாழட்டும்; அவர்களையும் நாமிங்கு அழைத்து ஒன்றுங் கூறவில்லை. "உலகம் என், யான் என்" என இரண்டையும் வெறுத்து விலகுகின்றவர் விலகட்டும்; அவர்களுக்கு யாம் உரைக்கக்கூடியது ஒன்றுமில்லை. மற்று, சிறிதுநாள் தாம் வந்து தங்கியிருந்த மண்ணினைக் குடைந்துகுடைந்து தின்று சென்ற நாற்றமே தம்பின் நிற்பதன்றி, உலகத்தில் தாம் பயின்றிருந்த அயலிடங்களை, தாம் முதலிற்கண்ட பொழுதிருந்தநிலையிலும் நலமுறப் பொலியுமாறு புரிந்துபின் இறத்தல் வேண்டுமெனும் நினைவினில் இதயம் வைத்து விவகரிப்போர்களுக்கே இதனை விளம்புகின்றோம். கலையொன்றே கைகொடுக்கும். வேறொன்றையும் தொடர்ந்து அவர் அலையவேண்டா. முன்னிரு கட்டுரைகளில் முனைந்துரைத்த நிரந்தர நினைவினை நிலைபெறச் செய்வதல்லால் நிகழ்த்துதற்கு யாதுளது? கலையெனும் நலத்தினாலன்றி அதனை நிறுவுதற்கு வேறோர் வழியில்லையே. யாம் இறுதியில் சொன்ன அந்நன்மக்கள், இந்த மேன்மையின் உண்மையை அறிந்துகொள்வாராயின், அறிந்துகொள்வதே யல்லாமல் அது மறவாமல் உணர்ந்துங் கொள்வாராயின், மற்றைய மூன்றினத்தவரும் அவ்வவர் அவலந் தீர்ந்து தாமேஅன்பினிற்கு ஆட்செய்ய ஆயத்தமாவார்களே. பிறரெல்லாங் கிடக்க, உலகினை உவந்தொரு நல்லெண்ணம் வைத்தவர்கள், செயற்குரிய நலமும் யாதென்பதைத் தெரிந்துகொள்ளட்டும்; பிறகு ஏனையோரும் தம் கயமையையும் மடமையும் உருத்துவிட்டு இவர் பின்னே வருவார். இதுபற்றி ஐயம்வேண்டா. செயற்குரியதொன்றும் செயற்கரிய தாகாது. ஆயிற்றெனினும் என்! "பெரியீர், செயற்கரிய வெல்லாம் செயற்குரியவே" என வள்ளுவர் தம் வாய்கொண்டு விளம்புவோம். கண்டு பரிதற் கேற்றனவாய் இக்காலம் நிகழ்வன எத்தனையோ பல; இவை யனைத்தினும் அதிகமும் பரியும்படி நிற்பது ஒன்றுளது—தம்முடைய இலாபத்தின்பொருட்டு, பொதுநலமென்னும் பொய்ப் பெயரால் உலகத்தை வஞ்சித்துக் கெடுக்கின்ற காரியங்களையே, தந்நலங் கருதாமல் உழைக்கின்ற சில உத்தமர்களும் செய்கின்றார்களே நல்ல எண்ணத்துடன் கேடு செய்வதனினுங் கொடுமை வேறெதனினுமில்லை. மனந் தூயவராதலின் அவர்செய்கையால் விளையுந் தீமையை மதித்தல் அரியதாகிவிடுகின்றது

கெட்டவர் எக்கேடு கெடட்டும்; மற்றவர்களை எவ்வளவுதான் கெடுக்க முயன்றாலும் முயலட்டும்; நல்லவர்கள்தாம் முயலவேண்டிய நன்மை இன்னதென்பதைத் தெளிந்துகொண்டாற் போதும். இவர் கலையுணர்வினைத் தம் உள்ளத்தில் வளர்த்து அதன் விளைவைப் பிறர்மனத்திலும் விதைத்து, அதனின்று கனிந்த வாழ்க்கை கைவரச் செய்வார்களாயின், ஏனைய வஞ்சகர் நெஞ்சமும்தானே வழிக்குவந்துவிடும்; தந்நலமே நாடுவார், பிறர்நலம் பேணலேயன்றித் தந்நலமெனத் தகுந்தது யாதொன்றுமில்லையென்னும் மெய்ம்மையை உணர்தர அவர்மனம் இசைவதாகும். வெறுத்தவர் உள்ளமும் பின்னர் உறத் தகும் இவ்வுலகம் என உவக்கத்தலைப்படும். எல்லோரும் நல்லாரோடொரினத்தவராவர். ஆனபின், இம் மாநுடப் புன்புரட்சிகள் தலைசாய்ந்து கடவுளின் ஆட்சி கைவந்துவிட்டது. கெடுதி புறப்பட்டால் அதனைத் தடுப்பது அரிதென்பர்; நன்மையைத் தடுப்பது அதனினும் அரிது; ஏனெனில், கெடுதி புறத்தினின்று புகுவதொன்று; நன்மையோ, எத்தனைதான் மூடி மறைந்திருந்தாலும் யாவர் உள்ளத்திலேயும் அமைந்திருக்கும் ஓர் தன்மை. அமயம் நேருமாயின் தீமைக்கு இடந்தருவதனினும் எளிதில் ஒருவன் நன்மைக்கு வயமாவான். இன்றைக்குங்கூடக் கள்வர் தொகையிலும் கொடுப்போர் தொகையே மிகுதி. எனின், கலையெனும் அவ்வொரு கருத்தினால் இத்துணைத் தீமைகளையும் விலக்க ஒண்ணுமோ என்றொருவரும் சோரவேண்டா.

ஆயினும் ஒன்று உற உற உணராற்பாலது கலையின் வளர்ச்சியிலே தாம் கருத்துடையவரா இருக்கின்றோரென்று கூறுவார் இன்றும் சிலர் உளர். எனினும் இச்சிலருள்ளும் பெரும்பாலோர், வயிற்றிற்கு உணவு தேடுவதிலும், தேடியவுணவைத் தின்பதிலும், தின்றவுணவின்மீது தூங்குவதும், தூங்கிய கலக்கத்தோடு வம்பு பேசுவதிலும் கழிகின்ற காலமெல்லாங் கடந்துபின், எஞ்சியபொழுது ஏதேனும் வாய்க்குமாயின் அதனைக் கலையின் வளர்ச்சிக்கே உதவிவிட நிச்சயிப்பதாக நினைத்திருக்கும் சிந்தனையளவிலே தீர்ந்துவிடுகின்றனர். இந்தச் சிந்தனை செய்கையாகி மாறுவதற்கு ஆதாரம் ஆவதற்கேற்ற பயிற்சியும், அப்பயிற்சியை அடையவேண்டும் என்னும் நினைவும் அவர்பால் காண்டலரிது. ஏனைய பலபல நல்லெண்ணங்கள் மகாநாடுகளின் முழக்கத்தினிடையே புதையுண்டு அழிவடைவதுபோல் கலையினைத் தரைமீது வளர்ப்பதற்கு என்று துவக்கப்படுகின்ற முயற்சிகளில் பற்பல மகாநாடனைய அவலக் கலகலப்புக்களினிடையே மண்ணின்கீழ்ப் புதையுண்டழிகின்றன. அத்தகைய முயற்சிகள் ஆகுமாறு ஆகட்டும். தாமே உணர்ந்தோ, உணர்ந்தோர் உரைப்பதை நம்பியோ, கலையல்லாற் கதியில்லை என்னும் உண்மையை நடத்திவைக்க நினைக்கின்ற நீர்மையோர் தமது முயற்சியின் பயனைத் தம்மிடத்திலேனும் பிறரிடத்திலேனும் பார்க்கவேண்டுமென்பது விருப்பமாயின், ஆங்கில அறிஞர் ஜான் ரஸ்க்கின் (John Ruskin) இயம்பிய ஒரு சிறு வாசகத்தை மந்திரம்போல் மனனம் செய்துகொள்ளல் இன்றியமையாதது—

Art, properly so called, is no recreation; it cannot be learned at spare moments, nor persued when we have nothing better to do. It is no handiwork for drawing room tables, no relief of the ennui of boudoirs; it must be understood and undertaken seriously, or not at all. To advance it, men's lives must be given, and ro recieve it, their hearts.

ரஸ்க்கினின் இவ்வாக்கியத்தினும் உண்மை சான்றவோர் சீரிய வாக்கியம் கலையின் திறத்தில் இதுகாறும் உரைக்கப்பெற்றதில்லை. காவியங்கள், சித்திரங்கள், நாடகங்கள், இசைகள் அனைய உருவங்கள் பலவுள கலையினை எவ்வுருவத்தில் பயில்வதாயினும், மாந்தர், தம் மனத்தனையும் தம் காலமத்தனையும் சிறிதும் எஞ்சாமல் அக்கலையினது பயிற்சியின்பொருட்டே செலுத்தவேண்டும். இல்லையேல் யாதும் பயனுமில்லை. கலையென்பது ஒரு விளையாட்டன்று, ஒழிந்த நேரத்திற் கற்றுக்கொள்ளக் கூடியதன்று, வேறொன்றும் செய்வதற்கில்லாதபோது தொடர்வதற்குரியதன்று. மனிதர் தம்மை கலையினுக்கே முழுவதும் முறைசெய்துகொள்வதல்லது வேறு வழியில்லை. கலையின் நலத்தினை எய்த விரும்புவோர் தம் இதயத்தைக் கொடுக்கவேண்டும். தாம் எய்தியதைப் பிறருக்களித்துக் கலையினதுணர்வை உலகத்தில் வளர்க்க முயல்வோர் தம் உயிரையே கொடுக்கவேண்டும். இதயத்தை ஈடுசெய்யாமல் கலையுணர்வு எய்துதல் இயலாது, உயிரையே கொடுக்காமல் எய்துவித்தலும் இயலாது. உலகத்திற்குத் தம்மை உதவியாக்க வேண்டுமென்று உள்ளந்தூண்ட, அவ்வுதவியைக் கலையின் வாயிலாகத்தான் செய்யலாம் என்பதையும் தேர்ந்து அறிந்துகொண்டவர், கலைநலந்தெரி புலமையில் தனக்கு இணையிலை எனத் திகழும் இந்த ரஸ்க்கின் செப்பிய நெறியை மறவாமல் கடைபிடிக்கக் கடவார். இன்னும், அவர் சொல்வதேபோல், "கலையின் வளர்ச்சியிலும் கல்வித்துறைகளிலும் தலையிட்டுக்கொள்கின்ற முழுமூடர் தொகை கடிதுபெருகுவதே தற்காலவாழ்க்கையில் காணப்படுகின்ற அநர்த்தங்கள் அனைத்திலும் மிகவும் இழிவானதென்று கருதலாம்." இதயம் இல்லாதவர், இருக்கின்ற இதயத்தையும் கலையினுக்குக் கொடுக்கத் துணியாதவர், வேறு வகைகளில் தம் வாயை விற்று வயிற்றை நிரப்பும் நினைவினை நிகழ்த்திக்கொள்ளட்டும். அன்னவர்களோடு ஒருவரும் பூசல் புரியவேண்டா. கலைகளின்பால் ஆசையும் அறிவும் ஓரளவு உள்ளவர்களையே நெருக்கிச் சில வுரைக்கப் பயன்படும்.

கலைப்பொருளைப் பயில்வதே கலையுணர்வு கைவருதற் காதாரமாவது. ஒழிந்த நேரத்தில் கலையின்பால் கண்ணைப் பரப்புவது பயிற்சியாகாது. கலைப்பொருள்கள் பலவற்றில் ஒன்றாகிய காவியப் பயிற்சியைப் பற்றிச் சிறப்பாக நாமிங்குச் சொல்பவை மற்றவைகளுக்கும் ஒக்கும். கலையுணர்வை உண்மையாயொருவர் பெறுவதற்கு முதலில் அதன் சுவை தோன்றவேண்டும். காவியச்சுவை மனத்தினைச் சூழ்ந்து இனிக்கவேண்டுமாயின், இலக்கியங்களை அகமுறத் தழுவிக்கொள்வதன்றியும், அதன் இலக்கணத்தையும் செவ்விதின் கற்றுத் தேர்தல் வேண்டும். தீர்ந்தவோர் கலைப்பொருளைக் காணுங்கால் விளைகின்ற மகிழ்ச்சி, மேலுறத்தோன்றி மறையும் ஒரு மேகம்போலல்லாமல் அறிவினது ஆழத்தினின்று சுரப்பதாயமைவதே சாலச் சிறந்தது. அவ் வறிவினிற்கு ஆதாரமாயிருப்பது, முன் சொன்னபடி, அப்பொருள் அமைந்துள இலக்கணத்தின் பயிற்சியாம். இதனோடு இம்மகிழ்ச்சி ஏன் பிறக்கின்றதெனும் நுட்பத்தையும் நுனித்துணர்தற்குரிய ஆராய்ச்சியும் இன்றியமையாததாம். அந்த அறிவைப்பெற்று இவ்வாராய்ச்சியை நிகழ்த்தப் புகுவோர்க்கு உழைப்பு மிகவேண்டும். இதற்குச் சலித்தால் பின்னர் என்செய உளது. கலைகளின் திறத்தில், தொழிலாளர் என்ன, உழைப்பாளிகளே உதவுவார்; பொழுதுபோக்காளர் போகுமிடம் வேறு பொழுதுபோக்காளிகளுக்கு இந்தியக்கலையினுள் இடமே இல்லையென்று, ஸர் ஆனந்தகுமாரசுவாமி, 'அபிநய தர்ப்பணம்' என்னும் நூலிற்குத் தாம் எழுதிய முகவுரையில் மிகவும் அழகாகக் காட்டியிருக்கின்றார். அவர் போல் கலைவளர்ச்சியின்பால் ஆழ்ந்த கருத்துடையவர்களுக்கு இதன் அருமை புலப்படும். இதனுண்மையை உணர முயலுமாறு யாவரையும் வேண்டிக்கொள்கின்றது கலாநிலயம். வேண்டிக் கொள்வதன்றியும் அதற்கு ஏற்ற முறைகளையும் வகுத்துத்தருங் கடனையும் பூண்டிருக்கின்றது விளையாட்டினுள் கலையுணர்வைச் சேர்த்து அமைத்தால் அவ்விளையாட்டின் பண்பும் பயனும் சிறக்கும்; மற்று, கலையினையோர் விளையாட்டாக்கிவிடலாகாது. இக்காலத்தவரோ, கல்வியைக் கைத்தொழிலும், கலையை விளையாட்டும், விளையாட்டைக் குற்றங்களாகவும் மாற்றிவிடுகின்றனர். ஆதலின், எல்லாத் திறத்திலும் ஓர் ஏக்கமே எஞ்சுகின்றது. இதனைக்காக்கமுயல்வது கலாநிலயம்.



# தமிழ்ப்பாடம் 82.

## அஷ்ட பிரபந்தம்—திருவேங்கடமாலை

[592-வது பக்கத் தொடர்ச்சி]

கோங்கைக்கோ டேறிக் குலுக்குமரி யுங்கரியும்
வேங்கைக்கோ டாதரிக்கும் வேங்கடமே—பூங்
[கைக்குண்
மெய்த்தவளச் சங்கெடுத்தார் மேகலைவிட் டங்கை
வைத்தவளச் சங்கெடுத்தார் வாழ்வு. 15. [தலை

பதப்பிரிவு:—கோங்குஐ கோடு ஏறி குலுக்கும் அரியும் கரியும் வேங்கை கோடு ஆதரிக்கும்-வேங்கைக்கு ஓடாது அரிக்கும்—வேங்கடமே பூ கைக்குள் மெய் தவளம் சங்கு எடுத்தார் மேகலை விட்டு அம் கை தலை வைத்தவள் அச்சம் கெடுத்தார் வாழ்வு.

பதவுரை.

கோடு - கிளையில்
ஏறி - ஏறி
கோங்கை - கோங்கு என்னும் மரத்தை
குலுக்கும் - குலுக்குகின்ற
அரியும் - குரங்குகளும்
வேங்கை - அருகிலிருக்கும் வேங்கைமரத்தின்
கோடு - கிளையை
ஆதரிக்கும் - விரும்பிப் பிடித்துக்கொள்வதற்கு
கரியும் - யானையும் [இடமானதும்,
வேங்கைக்கு - வேங்கைப்புலிக்கு
ஓடாது - பயந்து ஓடாமல் [மானதும்
அரிக்கும் - அதனை எதிர்த்து அழிப்பதற்கு இட
வேங்கடமே - ஆன வேங்கடமலைதான்,

பூ - தனது அழகிய, கைக்குள் - கரங்களில், மெய் - உண்மையான, தவளம்-வெண்நிறமமைந்த, சங்கு - சங்கத்தை, எடுத்தார் - தாங்கியவரும்; மேகலை-தான் பற்றியிருந்த புடவையை, விட்டு-விட்டு, அம்-அழகிய, கை-தனது கைகளை, தலை-தலையின்மேல், வைத்தவள்-வைத்துக்கொண்டவளாகிய திரௌபதியின், அச்சம் - பயத்தை, கெடுத்தார் - நீக்கினவருமான திருமால், வாழ்வு - வாழ்கின்ற இடம்.

விரிவுரை:-கோங்கிலிருந்து வேங்கைமரத்திற்குத் தாவுகின்ற குரங்குகளும், புலிக்குப் பயந்து ஓடாத யானைகளும் உள்ளது திருவேங்கடமலை யென்பது முதலிரண்டடிகளின் பொருள். 'வேங்கை கோடு ஆதரிக்கும்' எனப் பிரிந்து குரங்கிற்கும், 'வேங்கைக்கு ஓடாது அரிக்கும்' எனப் பிரிந்து யானைக்கும் அந்தத் தொடர் பொருந்துவதால் பிரிமொழிச் சிலேடை. பாஞ்சசந்யம்என்னும் வெண்மையான சங்கைத் திருமால் கையில் வைத்திருப்பதையும், அவர் திரௌபதியின் மானத்தைக் காத்ததையும் பின்னிரண்டடிகள் கூறுகின்றன. தன்னுடைய முயற்சியால் தன்னைக் காத்துக்கொள்ளலாம் என்ற நினைவினோடு, துகிலைத் துச்சாதனன் அவிழ்க்கமுடியாமல் அவள் பிடித்துக் கொண்டிருந்தவரையில் திருமால் தானும் சும்மாவிருந்து பிறகு அவள் தன் பிடிவிட்டுக் கையைத் தலைமேல் வைத்து 'நீயே கதி' என்று நின்றவுடன் அவள் மானத்தைக் காத்து உதவினர்.

குறிப்பு:—குலுக்கும் + அரி = குலுக்குமரி, என்று வந்ததும், வைத்தவள் + அச்சம் = வைத்தவளச்சம் என்று வந்ததும், நிலைமொழி ஈற்று மெய்யின்மேல் வருமொழி முதல் உயிர் ஏறி இயற்கையாகப் புணரும் என்ற பொதுவிதிக்கு உதாரணங்கள்.

---

ஆயுந் துறவறத்தை யண்டினமுத் தண்டினரும்
வேயுங் கிளைவிட்ட வேங்கடமே—தோயுந்
தயிர்க்காத்தாங் கட்டுண்டார் தாரணியிற் றந்த
வுயிர்க்காத்தாங் கட்டுண்டா ரூர். 16.

பதப்பிரிவு:—ஆயும் துறவு அறத்தை அண்டின முதண்டினரும் வேயும் கிளை விட்ட வேங்கடமே தோயும் தயிர்க்கு ஆ தாம் கட்டு உண்டார் தாரணியில் தந்த உயிர் காத்து ஆங்கு அட்டு உண்டார் ஊர்.

பதவுரை.

ஆயும் - ஆராய்ந்து அறிந்த
துறவு அறத்தை - சந்நியாசத்தை
அண்டின - சேர்ந்த
முத் தண்டினரும் - திரிதண்டம் தாங்கியுள துறவி
கிளை - தமது சுற்றத்தாரை [களும்,
விட்ட - விடுவதற்கு இடமாயிருப்பதும்;
வேயும் - மூங்கில்களும்
கிளை - கிளைகளை
விட்ட - விட்டு வளர்வதற்கு இடமாயிருப்பதும்
வேங்கடமே - வேங்கடமலைதான், [ஆன

தோயும் - தோய்ந்த, தயிர்க்கு ஆ - தயிரைத் திருடியதற்காக, தாம் - தாம், கட்டு உண்டார் - யசோதையால் கட்டப்பட்டவரும், தாரணியில் - பூமியில், உயிர் - உயிர்களை, தந்து - சிருஷ்டித்து, காத்து - பாதுகாத்து, ஆங்கு - அப்புறம், அட்டு - அழித்து, உண்டார் - பிரளயகாலத்தில் உண்டவருமான திருமால் விரும்புகின்ற, ஊர் - ஊர் ஆகும்.

விரிவுரை:-துறவிகளும் மூங்கிலும் "கிளைவிட்ட" வேங்கடம் என உரைப்பதில் கிளை விட்ட என்னும் இருபதங்களும் மாறுமல் அப்படியேநின்று பொருள் மாத்திரம் வேறு வேறு தருவதால், இது செம்மொழிச்சிலேடை.

---

பாம்புங் குளிர்சந்தின் பக்கத்தி னிற்கின்ற
வேம்பு மருத்துவக்கும் வேங்கடமே—காம்புகர
மானவரை நன்குடையா ராளாய்த் தொழுதேத்து
மானவரை நன்குடையார் வாழ்வு. 17.

பதப்பிரிவு:—பாம்பும் குளிர் சந்தின் பக்கத்தில்நிற்கின்ற வேம்பும் மருத்து உவக்கும் - மரு துவக்கும் - வேங்கடமே காம்பு கரம் ஆன வரை நல் குடையார் ஆள் ஆய் தொழுது ஏத்தும் மானவரை நன்கு உடையார் வாழ்வு.

பதவுரை.

பாம்பும் - பாம்புகளும்
மருத்து - காற்றை
உவக்கும் - விரும்பிக் குடிப்பதற்கு இடமானதும்,
குளிர் - குளிர்ந்த
சந்தின் - சந்தன மரத்தின்
பக்கத்தில் - பக்கத்தில்
நிற்கின்ற - வளர்ந்து நிற்கின்ற

வேம்பும் - வேப்பமரங்களும்
மரு - வாசனை வீச
துவக்கும்-ஆரம்பிப்பதற்கு இடமானதும் ஆன
வேங்கடமே - வேங்கடமலைதான்.

காம் - தனது கையே, காம்பு ஆன - காம்பு ஆகும்படி, வரை - கோவர்த்தனமலையை, நல்-நல்ல, குடையார் - குடையாக ஏந்திப் பசுக்களைக் காத்தவரும், ஆள் ஆய்-தனக்குத் தொண்டர் ஆகி, ஏத்தும்-புகழ்கின்ற, மானவரை - மனிதர்களை, நன்கு - அதிகமாக, உடையார் - உடையவருமான திருமால், வாழ்வு - வாழ்கின்ற இடம்.

விரிவுரை:—பாம்பு காற்றை ஆகாரமாகக் கொள்ளும் பிராணி என்று கருதப்படும். இம்மலையிலுள்ள காற்று மிகவும் மணம் பொருந்தியதா யிருக்குமாதலால் இக்காற்றைப் பாம்புகள் மிகவும் விரும்பிக்குடிக்குமாம். மருத்து என்பதற்குக் காற்று என்பது அர்த்தம். பாம்பு, மருத்து உவக்கும், என்று பிரித்துக் கொள்ளவேண்டும். சந்தனமரத்தின் பக்கத்தில் நிற்கின்ற வேப்பமரமும் சந்தனத்தோடு சேர்ந்துசேர்ந்து தானும் வாசனைவீச ஆரம்பிக்குமாம். மரு என்றால் வாசனை என்பது அர்த்தம்— வேம்பும் மரு துவக்கும், எனப் பிரித்துக்கொள்ள வேண்டும். இது பிரிமொழிச்சிலேடை

இந்திரன் விளைவித்த சோனைமாரியிலிருந்து தான் மேய்த்த பசுக்கூட்டத்தைக் காப்பதற்காகக் கண்ணபிரான் கோவர்த்தன கிரியை எடுத்துக் குடையாகப் பிடித்த கதையும், திருமால் மனிதர்களிற் பலரைத் தனக்குப் பக்தர்களாய் உடையவர் என்பதும் பின்னிரண்டடிகளில் கூறப்பட்டிருக்கின்றன. காம்பு காம் ஆன வரை, என்பதற்கு இவரது கையே அம்மலையாகிய குடையைப் பிடிப்பதற்குக் காம்பு ஆயிற்று, என்பது பொருள். மானவரை நன்குடையார், மானவரை நன்குடையார், என்று ஓர் அடியில் வந்த எழுத்துக்களே மீண்டும் முதலெழுத்தும் உள்பட மறு அடியிலும் வந்திருப்பதால் சொல்லணியில் இது மடக்கு அணி ஆகும். முன்பாட்டைப்போல முதலெழுத்து மாத்திரம் வேறாயிருக்குமானால் திரிபு அணி என்பதாகும்.

குறிப்பு:—காம் + ஆன - காமான, என்று புணர்ந்ததும், ஆள் + ஆய் = ஆளாய், என்று புணர்ந்ததும் பொது விதியின்படி ஆயின. காம் என்பது மூன்றெழுத்துச் சொல், ஆதலால் காம்மாய் என்று ஆகவில்லை. ஆள் என்பது இரண்டெழுத்துச் சொல்லாயிருப்பினு முதலெழுத்து நெடிலாதலால் 'ஆள்ளாய்' என்று ஆகவில்லை.

---

## இலக்கணம்

நிலைமொழியிறுதியிலுள்ள மெய்யெழுத்தும் வருமொழி முதலிலுள்ள உயிரும் புணரும்போது எப்படியாகும் என்பதைச் சொல்லிவருகின்றோம். இதுவரையில் சொன்ன விதிகள், நிலைமொழி யிறுதியில் இருக்கின்ற மெய் மகரமெய் தவிர வேறு எந்த மெய்யானாலும், வருமொழிமுதல் வருகின்ற உயிர் எந்தஉயிரானாலும், பொருந்தும். அதுவுமன்றி நிலைமொழியும் வருமொழியுந் தொடர்கின்ற தொடர் எந்தத்தொடராயினும், நிலைமொழி மகரமெய்யை ஈற்றிலுடையதாக இல்லாமற்போனால், புணர்ச்சி விதிகள் இவைகளே.

மெய்யெழுத்துக்கள், க் ங் ச் ஞ் என்ற வரிசையில் இருக்கின்ற பதினெட் டாகும். தமிழ்ப்பாஷையில் இந்தப் பதினெட்டு மெய் எழுத்துக்களில் எல்லாம் மொழிக்கு இறுதியில் வரக்கூடியன வல்ல. மெய்யெழுத்துக்களில் க் ச் ட் த் ப் ற், என்ற ஆறும் வல்லினமென்றும், ங் ஞ் ண் ந் ம் ன், என்ற ஆறும் மெல்லினமென்றும், ய் ர் ல் வ் ழ் ள் என்ற ஆறும் இடையினமென்றும், உச்சரிக்கின்ற முறைக்கு இணங்கிப் பிரிக்கப்பட்டிருக்கின்றனவென்பதை முன்னரே சொல்லியிருக்கின்றோம். இவைகளில் வல்லினத்தைச் சேர்ந்த மெய்யெழுத்து ஒன்றுகூட மொழிக்கு இறுதியில் வராது. மெல்லினத்தில், ங், மொழிக்கு இறுதியில் வராது, மற்ற ஐந்து எழுத்துக்களும் வரும். இடையின மெய்யெழுத்து ஆறும் இறுதியில்வரும். ஆகையால் மெய்யெழுத்துப் பதினெட்டில், மொழியின் இறுதியில் நிற்பன, ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள், என்னும் பதினொன்றே யாகும். இந்தப் பதினொன்றில் ம் தவிர மற்றப் பத்தெழுத்துக்களில் நிலைமொழி இறுதியில் இருப்பது எந்த மெய்யெழுத்தானாலும், வருமொழி முதலில் இருக்கும் உயிர் எதுவானாலும், அவை என்ன தொடரானாலும் முன் சொன்ன விதிகளுக்கு இணங்கிப் புணரும்.

அவ்விதிகளாவன:—

i. நிலைமொழி இரண்டு எழுத்திற்கு மேற்பட்ட எழுத்துக்களால் ஆனசொல்லாயின்; வருகின்றஉயிர் நிற்கின்ற மெய்யின்மேல் ஏறி உயிர்மெய் ஆய்விடும். இது இயல்புப் புணர்ச்சி. உதாரணம்:—

சூரியன் + உதித்தான் = சூரியனுதித்தான்; எழுவாய்த் [தொடர்
இகல் + அழித்தான் = இகலழித்தான்; இரண்டாம் [வேற்றுமைத் தொகை.
மாதர் + ஆட்டம் = மாதராட்டம்; ஆறும் வேற்றுமைத் [தொகை.
அதள் + எலும்பு = அதளெலும்பு; உம்மைத்தொகை
வெரிந் + ஏற்றினன் = வெரிநேற்றினன். ஏழாம் வேற்றுமைத் தொகை. [வெரிந்-முதுகு]

ii. நிலைமொழி இரண்டெழுத்துச் சொல்லாயிருப்பினும், முதலெழுத்து நெடிலாயிருக்குமாயின், முன் விதிப்படியே, ஈற்றுமெய்யும் முதலுயிரும் சேர்ந்து உயிர்மெய் யாகிவிடும். உதாரணம்—

பாய் + அலை = பாயலை; வினைத்தொகை.
நாண் + இல்லை = நாணில்லை, எழுவாய்த் தொடர்.
ஊழ் + உரம் = ஊழுரம்; ஆறும்வேற்றுமைத்தொகை.

iii. நிலைமொழி இரண்டெழுத்துச் சொல்லாகி, அதனில் முதலெழுத்தும் குறிலாக இருக்குமானால், அந்நிலைமொழி இறுதியிலுள்ள மெய்யெழுத்து வருமொழி முதலில் உள்ள உயிரோடு புணரும்போது, அந்த மெய் இரண்டாக விரிந்து ஒன்று அப்படியே யிருக்க மற்றது அவ்வுயிரை ஏற்றுக்கொள்ளும்—இது விகாரப்புணர்ச்சி. உதாரணம்—

விண் + ஒளி = விண்ணொளி; ஆறும்வேற்றுமைத் தொகை.
கல் + உடைத்தான் = கல்லுடைத்தான்; இரண்டாம் வேற்றுமைத் தொகை.
கள் + ஊறியது = கள்ளூறியது எழுவாய்த் தொடர்,
செய் + அரசே = செய்யரசே; வினைமுற்றுத் தொடர்.

இவ்வுதாரணங்களிலெல்லாம் நிலைமொழியும் வருமொழியும் என்ன பொருளில் தொடர்ந்தபோதிலும் இறுதிமெய்யும் முதலுயிரும் புணர்கின்ற விதத்தில் பேத மில்லாதிருக்கக் காண்பீர். ஆனால், நிலைமொழி இறுதி மகரமெய்யா யிருக்குமானால் அது வருமொழி முதல் உள்ள உயிரோடு புணரும்போது தொடருக்குத் தகுதகப்படி ஒவ்வோர் சமயம் வித்தியாசப்படும். அவைகளை அடுத்தநாள் கற்போம்.



# கலித்தொகை

[593-வது பக்கத் தொடர்ச்சி]

## பாலைக்கலி 21

தலைமகனாற் பிரிவு உணர்த்தப்பட்ட தோழி அவனை நோக்கி, களவுக்காலத்தே வேட்கைபிறக்கின்ற பருவத்தளா யிருந்த தலைவியின் நிரம்பா உறுப்புக்களை அவன் விரும்பிப் பாராட்டியதை எடுத்துக்கூறி வேட்கை பிறந்த பருவத்தில் அவளது நிரம்பிய உறுப்புக்களை விரும்பிப் பாராட்டி உடன் உறையாமல் பிரிந்துபோதலைக் குறிப்பால் மறுத்ததைக் கூறுவது இச் செய்யுள்.

உண்கடன் வழிமொழிந் திரக்குங்கான் முகனுந்தாங்
கொண்டது கொடுக்குங்கான் முகனும்வே றாகுதல்
பண்டுமிவ் வுலகத் தியற்கை யஃதின்றும்
புதுவ தன்றே புலனுடை மாந்திர்
தாயுயிர் பெய்த பாவை போல
நலனுடை யார்மொழிக்கட் டாவார்தாந் தந்நலந்
தாதுதேர் பறவையி னருந்திறல் கொடுக்குங்கா
லேதிலார் கூறுவ தெவனோநின் பொருள்வேட்கை

நறுமுல்லை நேர்முகை யொப்ப நிரைத்த
செறிமுறை பாராட்டி னாய்மற்றெம் பல்லின்
பறிமுறை பாராட் டினையோ வைய

நெய்யிடை நீவி மணியொளி விட்டன்ன
வைவகை பாராட்டி னாய்மற்றெங் கூந்தற்
செய்வினை பாராட் டினையோ வைய

குளனணி தாமரைப் பாசரும் பேய்க்கு
மிளமுலை பாராட்டி னாய்மற்றெம் மார்பிற்
றளர்முலை பாராட் டினையோ வைய

எனவாங்கு

அடர்பொ னவிரேய்க்கு மவ்வரி வாடச்
சுடர்காய் சுரம்போகு நும்மையா மெங்கட்
படர்கூற நின்றது முண்டோ தொடர்கூரத்
துவ்வாமை வந்தக் கடை.

### (தரவு)

(வரி. 1-8) புலன் உடை மாந்திர் - அறிவுடைய மாந்தரே! உண் கடன் - (தாம்) உண்ணும்பொருட்டு வாங்கும் கடனை, வழிமொழிந்து - தாழ்வுசொல்லி, இரக்குங்கால்- இரந்து கேட்கும் காலத்து, முகனும் - (அவ்வாறு கடன் கேட்பார்) முகமும், தாம் கொண்டது - (அங்ஙனம்) தாம் வாங்கின கடனை, கொடுக்குங்கால் - (மீண்டும்) கொடுக்கும் காலத்து, முகனும் - (அவர்) முகமும், வேறு ஆகுதல் - வேறுபடுவது, பண்டும் இ உலகத்து இயற்கை - முன்பும் இவ்வுலகத்துள்ளார் இயல்பு, அஃது இன்றும் புதுவது அன்றே - அஃது இந்நாளும் புதியதொன்று அன்றே! தாய் - சித்திரம் எழுதுகின்றவள், உயிர்பெய்த - உயிருள்ளதுபோலும் தன்மைபெற எழுதிய, பாவை போல - படம் (தான் அழியுமளவும் தன்னை எழுதியவளது கருத்திற்கு இயைந்த குறிப்பினைப் பெற்றிருப்பது) போல, நலன் உடையார்-நற்குணம் உடையவர், மொழிக்கண் தம் நலம் தாவார் - (தாம் அழியுமளவும்) தம் மொழியிடத்து உண்மை தவறார், தாது தேர் பறவையின் - தேனைத் தேடி உண்ணும் வண்டு (அதனை உண்ட பிறகு அப் பூவினைக்கருதாது விட்டகல்வது) போல, அருந்து- (தலைவியினை) அனுபவித்து, இறல் கொடுக்குங்கால் - (பின்னர் அவளைக் கருதாமல் விட்டகன்று அவளுக்கு) அழிவை நீ கொடுக்குங் காலத்து, நின் பொருள் வேட்கை - உனது பொருளாசையைப் பற்றி, ஏதிலார் கூறுவது எவன்- (உன்னோடு)யாதொரு தொடர்பும் இல்லாதவளாய நான் கூறுவது என்ன பயன்படும் ?

தாம், ஓ—அசைகள்

189156

'ஆர்ந்து' என்பது 'அருந்து' என விகாரப்பட்டது.! வெறுப்பினால் தோழி தன்னை 'ஏதிலார்' எனப் பிறர்போலக் கூறினாள்.

"பசியுடையார் அஃதில்லாரிடத்துச் சென்று தாழ்வு சொல்லி இரந்துநின்று உணவுக் கடன் பெற்றுத் தம் பசி தீர்வதுபோல, முன்னர் வேட்கையுடைய நீ வேட்கை பிறக்கின்ற பருவத்தளாய தலைவியிடத்து வந்து தாழ்வு சொல்லி இரந்துநின்று அவளது நலத்தினை அனுபவித்து உனது வேட்கை தீர்ந்தனையே! அப்பசி தீர்த்தார் பின்னர்ப் பசியுற்றவிடத்து, 'முன்னர் எம்மாற் பசி தீர்ந்தவராய இவர் இன்று எமது பசியை போக்காமற்போகார்' என்று துணிந்து, அவரிடம் சென்று இரந்தவழி அவர் சிறிதும் இரங்காததுபோல, உன் வேட்கை தணித்தவள் பின்னர் வேட்கைபிறந்த பருவத்தளாயவிடத்து, 'முன்னர் என்னால் வேட்கை தணிந்தவராய இவர் இன்று எனது வேட்கை தணியாமற் போகார்' என்று துணிந்து, உன்னிடம் வந்து இரந்தவழி நீ சிறிதும் இரங்கலையே!" என்பதும், "வல்லவளாய ஓர் ஓவியப் பெண் எழுதிய படத்திலுள்ள பாவை தன்னைத் தந்தவளிடத்துத் தான் பெற்ற மெய்ப்பாட்டினை (மனக் குறிப்பினை)த் தான் அழியுமளவும் காட்டத் தவறாததுபோல, நல்லோர் தாம் முன்னர்க் கூறிய மொழியினைத் தாம் அழியுமளவும் காக்கத் தவறாரன்றே? நீயோ, 'நான் உன்னை விட்டுப் பிரியேன்' என்று அந்நாள் இவட்குக் கூறியமொழி தவறுகின்றனையே!" என்பதும் தோழியின் கருத்து.

தாய் உயிர் பெய்த பாவையின் தன்மையை, 'வடுப்பிளவு அனைய கண்ணாள் வல்லவன் எழுதப்பட்ட படத்திடைப் பாவை போன்று ஓர் நோக்கினளாகி நிற்ப'—'எழுதப்பட்ட துகிலிகைப் பாவை ஒத்தார்,' என்னும் சிந்தாமணி அடிகளாலும் (1573, 2542) அறிக.

### (தாழிசை)

(வரி 9-11) ஐய - தலைவனே, நறு முல்லை - மணமுள்ள முல்லையினது, நேர் முகை ஒப்ப நிரைத்த-(தம்மில்) ஒத்த அரும்புகளைப் போல வரிசையமைந்த, செறி முறை - (எமது பற்களின்) நெருங்கிய தன்மையை, பாராட்டினாய்- (நீ முன்னே விரும்பிக்) கொண்டாடினையே, எம் பல்லின் (இப்போது அந்த) எம் பற்களினது, பறிமுறை-விழுந்து முளைத்த தன்மையை, பாராட்டினையோ - (நீ விரும்பிக்) கொண்டாடினையோ ?

ஓகாரம் எதிர்மறையாகலின் 'மற்று' வினைமாற்றிற்று.

'செறிநிரை வெண்பலும் பறிமுறை நிரம்பின' என்றார் குறுந்தொகையிலும். (337)

(வரி. 12-14) ஐய - தலைவனே, நெய் இடை நீவி-எண்ணெயை (எமது கூந்தல்) இடத்துத் தடவியதால், மணி

ஒளி விட்டன்ன-நீலமணி ஒளிவிடுவது போன்ற, ஐவகை-(எமது கூந்தல் முடிக்கப்படும்) ஐந்து வகைகளையும், பாராட்டினுய் - (நீ முன்னே விரும்பிக்) கொண்டாடினையே! எம் கூந்தல் செய்வினை - (இப்போது நீ வேறு வகையாக முடித்து) எமது கூந்தலிற் செய்யத்தக்க செயல்களால், பாராட்டினையோ-(அதனை விரும்பிக்) கொண்டாடினையோ ?

'நீவ' என்னும் எச்சம் 'நீவி' எனக் காரணப் பொருளில் வந்தது. ஐவகையாவன - குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை; இவற்றுள் முதல்இரண்டும் வகுத்து முடித்தல், இறுதி இரண்டும் விரித்துமுடித்தல், மற்றையது தொகுத்துமுடித்தல்.

முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என்பன ஐவகையாம் என்பாரும்; குளிர்ச்சி, அழகு, இருட்சி, நீட்சி, சுருட்சி என்பன ஐவகையாம் என்பாரும், வேறு கூறுவாரும் உளர்.

'பொம்மல் ஓதி நீவியோனே' எனவும், 'நறுமென் கூந்தல் மெல்லணையேமே' எனவும் வருதலின் (குறுந்தொகை 379, 270), கூந்தலை நீவுதலும் அதனை அணையாகக் கொள்ளுதலும் கூந்தற் செய்வினையின்பாற் படும்.

(வரி. 15-17) ஐய-தலைவனே! குளன் அணி-குளத்தை அழகு செய்யும், தாமரை பாசு அரும்பு எய்க்கும் - தாமரையின் பசுமையான அரும்புகளை ஒக்கும், இள முலை - (எமது நிரம்பாத) இள முலைகளை, பாராட்டினுய் - (நீ முன்னே விரும்பிக்) கொண்டாடினையே! எம் மார்பின் - (இப்போது) எமது மார்புமுற்றும் இடங்கொண்ட, தளர் முலை - (எமது இடை) தளர்தற்குக் காரணமாய (போதுகளை ஒக்கும் அம்) முலைகளை, பாராட்டினையோ-(நீ விரும்பிக்) கொண்டாடினையோ?

மார்பின் முலை என மிகைபடக் கூறியது அவை மார்புமுற்றும் இடங்கொண்டு நிற்றலை உணர்த்தற்கு.

'(நோய்) தீர் மருந்து' என்பது போலத் 'தளர் முலை' நின்றது.

முன்னர் 'அரும்பு எய்க்கும்' என்றதால் பின்னர்ப் 'போது எய்க்கும்' என்பது பெற்றும்; 'பொங்கல் வெம் முலைகள் என்னும் போது' என்றார் சிந்தாமணியிலும் (2805); போது-அலர்கின்ற முகை. 'அரும்பிற்கும் உண்டோ அலரது நாற்றம்... அமிர்தமன்றோ முதிரும் முலையார் முயக்கு' (வெண்பாமாலை) ஆகலின் தோழி இவ்வாறு கூறினள். எனவாங்கு - அசை

(வரி. 19-22) தொடர் கூர-(எமது தீவினைத்) தொடர்பு மிக்க காரணத்தால், துவ்வாமை - (உம்மை) அனுபவியாமை (ஆகிய பயன்), வந்தக் கடை - வந்து சேர்ந்த பொழுது, அடர் பொன் அவிர் எய்க்கும்-தகடாகியபொன்னின் ஒளியை ஒக்கும், அ அரி வாட-அழகிய (எமது) நிறம் கெட, சுடர் காய் சுரம் போகும் நும்மை - (எம்மைப் பிரிந்து) சூரியன் (சினந்து) காய்கின்ற காட்டிற் போகும் உம்மை, யாம் - யாங்கள், எங்கள் படர் கூற - எம்மிடத்துள்ள வருத்தத்தைச் சொல்லி விலக்க, நின்றதும் உண்டோ-(எம்மிடத்து) நின்றதோர் நல்வினையும் உண்டோ ? (இல்லையாகலின் நீர் செல்லும்.)

# காற்று மழை

## Shakespeare—"The Tempest"

அங்கம் 3. களம் 2.

[589-வது பக்கத் தொடர்ச்சி]

ஸ்ட்டிபானே:—இனி, உன் கதையோடு மேற்செல். [ட்ரின்குலோவிற்கு] சொல்கின்றேன் பார், இன்னும் விலகி நில் (1).

காலிபன்:—அடி அவனைப்போதுமளவு; சிறிதுகாலம் பொறுத்து நானும் அவனை அடிப்பேன்.

ஸ்ட்டிபானே:—(ட்ரின்குலோவிற்கு) இன்னும் தூர நில். (காலிபனுக்கு) வா, மேலே சொல்.

காலிபன்:—ஆம், நானுனக்குச் சொன்னபடி பிற்பகலில் துயில்போவது அவனுக்கு வழக்கம். அங்கு அவனை, முதலில் அவன் புத்தகங்களைப் பற்றிக் கொண்டு, மூளையைத் தகர்த்துவிடலாம் நீ. அல்லது, ஒரு கட்டையால் அவன் மண்டையை இடித்துவிடு; அல்லது, முளையடித்து அவனைத் துளைத்துவிடு; அல்லது உன் கத்தியால் அவன் குரல்வளையை அறுத்துவிடு. முதலில் அவன் புத்தகங்களைக் கைப்பற்றிக்கொள்ள மறக்காதே. ஏனெனில், அவைக ளில்லாவிடில், என்னைப்போல் அவனும் ஒரு மூடன்தான். அப்புறம், ஏவுதற்கு அவனுக்கு ஓர் ஆவியும் இல்லை. ஆவிகளெல்லாம் அவனை நான் பகைப்பதுபோலவே வேருடன் பகைக்கின்றன—அவன் புத்தகங்களைமாத்திரம் கொளுத்திவிடு. அவனிடத்தில் உயர்ந்த பொருள்கள் இருக்கின்றன—அப்படித்தான் சொல்கின்றான் அவன்—வீடொன்று தனக்குக்கிடைக்கும்போது அவைகளைக்கொண்டு அலங்கரிப்பான். மிகவும் ஆழ்ந்து கருதஇருப்பது என்னவென்றால், அவன் பெண்ணின் அழகு. அவனே இவளை இணையிலி என்று அழைக்கின்றான். என் தாய் ஸைக்கொராக்ஸையும் இவளையும் தவிர நான் வேறோர் மாதினை என்றும் பார்த்ததில்லை. பெருமை சிறுமையை எவ்வளவுதூரம் விஞ்சுகின்றதோ அவ்வளவு தூரம் இவள் ஸைக்கொராக்ஸை விஞ்சுகின்றாள். (2)

ஸ்ட்டிபானே:—அத்தனை பலே குட்டியா அது (3)? ஏ விரூபி, நான் அந்த மனிதனைக் கொன்றுவிடுவேன்; அவன் மகளும் நானும் அரசனும் அரசியுமாக இருப்போம்—நீடூழி வாழ்க நாங்கள் (4)—ட்ரின்குலோவும் நீயும் இராஜப்பிரதிநிதிகளாக இருக்கலாம்—ட்ரின்குலோ, இந்தச் சூழ்வினை உனக்குச் சம்மதமா?

ட்ரின்குலோ:—சாலச் சிறந்தது!

ஸ்ட்டிபானே:—உன் கையைக் கொடு (5). உன்னை அடித்ததற்கு வருந்துகின்றேன். எனினும், நீ உயிரோடிருக்கும்வரை உன் தலையில் ஓர் நல்ல நாக்கு வைத்திரு (6)

காலிபன்:—இந்த அரைமணி நேரத்திற்குள் அவன் தூங்கிவிடுவான். அப்பொழுது அவனை நீ அழித்து விடுவாயா?

ஸ்ட்டிபானே:—என் மானத்தின்மேலாணை. (7)

ஏரியல்: — இதனை என் எசமானனுக்குச் சொல்வேன்.

காலிபன்:—என்னை மகிழச்செய்கின்றாய். நான் இன்பம் நிறைந்திருக்கின்றேன். நாமெல்லோரும் உல்லாசமா யிருப்போம். சற்றுமுன் நீ எனக்குக் கற்றுத்தந்த பல்லவியைப் பிடிப்போமா? (8)

ஸ்ட்டிபானே:—ஏ, விரூபி, நீ வேண்டுவாயாயின், நான் நியாயம் செய்வேன்—எந்த நியாயமும் (9)—வா, ட்ரின்குலோ, பாடுவோம். (பாடுகிறான்)—

எள்ளடா அவர்களைத் தள்ளடா,
தள்ளடா அவர்களை எள்ளடா
உள்ளுதற் குத்தடை இல்லெடா (10)

காலிபன்:—இது அன்று இராகம்.

[ஏரியல் சிறுபறை கொட்டிக்கொண்டு இராகத்தைக் குழலில் பாடுகின்றது]

ஸ்ட்டிபானே:—என்னது இந்த இது?

ட்ரின்குலோ:—உருவமில்லாதான் ஒருவனது படத்தினுல் பாடப்படுகின்ற இது நம்முடைய பல்லவியின் இராகம் (11).

ஸ்ட்டிபானே:—நீயோர் மனிதனுயின் உன்னை உன் உருவத்திற்காட்டு: நீயோர் பேயேயாயின் உன் இட்டபடி எடுத்துக்கொள் (12).

ட்ரின்குலோ:—ஐயோ, என் பாவங்களை மன்னித்திடுக (13)!

ஸ்ட்டிபானே:—சாகின்றவன் எல்லாக் கடன்களையும் தீர்ப்பவனுகின்றான் (14). உனக்கு அஞ்சமாட்டேன்—வா, செய்வதைச் செய்—ஐயோ என்ன செய்வோம்! (15)

காலிபன்:—அஞ்சுகின்றனையோ!

ஸ்ட்டிபானே:—இல்லையே, விரூபி, நானில்லை (16).

(1) ட்ரின்குலோவை அடித்துத் தூர அகற்றியபின், துவக்கிய கதையைத் தொடரும்படி காலிபனுக்குக் கட்டளையிடுகின்றான் ஸ்ட்டிபானே.

(2) காலிபன் பட்டிருந்த கஷ்டங்களிலிருந்து அவனை விடுவித்து, நன்மையடையும்படி வளர்க்கமுயன்ற ப்ராஸ்ப்பீரோவிற்கு இந்தக் குரூரம் மிகுந்த விரூபி காட்டும் கைம்மாறு இது. ப்ராஸ்ப்பீரோ கொடியோனும். இவனுக்கு உரியதான தீவை வஞ்சித்துக் கைப்பற்றிக் கொண்டானும். (ஆளில்லா இந்தத் தீவிற்கு அதிபதியாய்க் காலிபன் என்ன இலாபம் பெறப் போகின்றான்?) தான் விடுதலை அடைய வேண்டுமாம். அதன் பொருள், உத்தமனாகிய ஒருவனைக் கொல்வித்துக் குடிகார னொருவனுக்கு அடிமைத்தொழில் புரிவது என நிற்கின்றது. விரூபியாகிய இந்தக் காலிபன் போன்ற புத்தியேகொண்டு விவகரிக்கின்ற மாந்தர் இக்காலத்தில் பலராவதை அவரவர் நோக்கம் செயல்களை சோதித்து அறிந்து கொள்ளலாம்.

புத்தகம் - ப்ராஸ்ப்பீரோவின் மந்திரவித்தைப்புத்தகங்கள்; அவைகள் இல்லாமல் அவன் ஒரு சாலவித்தையும் செய்ய முடியாது.

ஆவி - ப்ராஸ்ப்பீரோவின் ஏவல்செய்யும் சாத்தான்கள். ஆவிகள் ப்ராஸ்ப்பீரோவை அடியுடன் பகைக்கின்றன என்பது மெய்யன்று. ஆயினும், தான் பகைகொண்ட ஒருவனை மற்றவரும் பகைக்கின்றார் என்று எண்ணுவது கீழோர் இயற்கை.

உயர்ந்த பொருள்கள் - முன் சொன்னபடி, (170-வது பக்கம்)ப்ராஸ்ப்பீரோவைக் கடலில் கடத்தியபோது படகில் கன்ஸாலோ வைத்திருந்த, 'உயரிய உடைகள், துகில்கள், இன்றியமையாத மற்றவைகள்,' போலும்.

வீடொன்று - இப்பொழுது வசித்திருக்கின்ற குகையை விட்டுத் தான் ஒருகாலத்தில் நகர்சென்று அடைய நினைத்திருக்கின்ற வீடு.

இணையிலி-இணையற்றவள். இவளுக்குச் சமமான அழகுடைய வேறொருத்தி இல்லாதவள் மீராண்டா என்று ப்ராஸ்ப்பீரோ கூறுகின்றான். ஆயினும், நான் இவளையும் எனது தாயாகிய ஸைக்கொராக்ஸையும் தவிர வேறு மாதரைப் பார்த்ததில்லை யாகையால், இவ்வுரையின் உண்மையைவற்புறுத்தி உரைக்க என்னால் இயலாது. எனினும் அவ்விருவருக்கும் இடையே இருக்கின்றவேற்றுமை எனக்குத் தெரியும். பெருமைஎன்ற பண்பிற்கும் சிறுமைஎன்ற பண்பிற்கும் இடைகிடக்கும் வேற்றுமையி னளவு, மிராண்டா ஸைக்கொராக்ஸை அழகில் விஞ்சி நிற்கின்றாள் - என்பது பொருள்.

(3) பலே குட்டி அது - சிறு பெண்களைக் குறித்து இழிந்தோர் பேசும் வழக்கு இது.

(4) தனக்கும் தன் அரசிக்கும் தானே வாழ்த்துக்கூறிக் கொள்கின்றான்.

(5) சிநேகத்திற்கு அடையாளமாக ட்ரின்குலோவுடன் கை குலுக்குகிறான்.

(6) நாத்தடித்துப் பேசாதே—என்பது பொருள்.

(7) என் மானத்தின்மேல்ஆணை, நான் அவனை நீசொன்னபடியே தூங்கும்பொழுது கொன்றுவிடுகின்றேன்—என்று வாக்களிக்கின்றான்.

இந்த விஷயத்தில், காலிபனுக்கு இருக்கின்ற ஊக்கம் ஸ்ட்டிபானேவிற்கு இல்லை. மீண்டும் மீண்டும் அவனே இவனைத் தூண்ட வேண்டியிருக்கின்றது.

(8) பல்லவி பிடித்தலாவது, ஒருவர் ஒரு அடி பாடிவிட அதனைத் தொடர்ந்து மற்றவர் பாடுவதாகி நாலைந்து பேர் சுற்றிச்சுற்றிப் பாடுவது.

(9) நியாயம்—நியாயமான காரியம். நீ வேண்டிக் கொள்வாயானல் நான் மறுக்காமல், நியாயமான காரியம் எதையும் செய்வேன்—என்பது பொருள். ப்ராஸ்ப்பீரோவைக் கொல்லும்படி வேண்டிக்கொண்டாய், அது நியாயமான காரியம், ஆகையால் உடன்பட்டேன். இப்பொழுது பாடச் சொல்கிறாய், இதுவும் நியாயமான காரியம், ஆகையால் உடன்படுகிறேன்—என்று, நியாயத்தைப் பற்றி ஸ்ட்டிபானே கொண்டிருக்கின்ற கருத்து நிற்கின்றதுபோலும். மனிதரில் அனேகர் தாம் நியாயமான காரியத்திற்குஉடன்படுகின்றோமென்று கூறிக்கொள்ளும்செய்தி பெரும்பாலும்இவ்வாறே அமைந்திருப்பதைஒப்புநோக்கி உணர்ந்துகொள்ளலாம்.

(10) இந்தப் பாட்டு யாதும் பொருளற்றது. ஆயினும், யாரையோ எள்ளித் தள்ளச் சொல்லுகின்றான். உள்ளுவதற்குத் தடை இல்லை-என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. ஒருவனைப் பற்றி எவ்வளவு இகழ்ச்சியாக வேண்டுமானாலும் மனத்திற்குள் எண்ணிக்கொள்வதை யாராலும் தடுக்கமுடியாது—என்பது இதன் கருத்து. இல்லெடா, என்பது 'இல்லையடா' என்பதன் மரூஉ. உள்ளுதற்கு - மனதிற்குள்ளே அவரவர் எது வேண்டுமாயினும் எண்ணிக்கொள்வதற்கு.

(11) பாடுவோன் கண்ணுக்குத் தெரியாமையால், 'உருவமில்லாதான் படம்'—என்கின்றான்.

(12) மனிதனாயின் உன் நிசமான உருவத்தைக் காட்டு, பேயானால் உனக்கு இஷ்டமான உருவத்தை எடுத்துக் கொண்டு காட்டு—என்பது பொருள்.

(13) பேய்தான் உயிரைக் கொண்டுபோக வருகின்றதென்று அஞ்சும் ட்ரின்குலோ, தன் பாவங்களை மன்னிக்கும்படி, சாகுமுன் கடவுளை வேண்டிக்கொள்கின்றான்.

(14) உயிர்தானே போகும்செத்தாலென்ன, அதன்பின் எல்லாக் கஷ்டமும் தீர்ந்ததாகின்றது - என்பது இவ்வழக்கின் பொருள்.

(15) சாவிற்குப் பயப்படாமல் வீரம்பேசிய ஸ்ட்டிபானே, ஏரியலின் பாட்டொலி அருகு நெருங்கியதும், நடுநடுங்கி 'ஐயோ என்ன செய்வோம்' என்று கூவுகின்றான்.

(16) காலிபனால் வீரனென்று கருதப்படுகின்ற ஸ்ட்டிபானே, அவன் கேள்விக்கு நாணி, தான் அஞ்சியதில்லை என்று துணிவு கூறுகின்றான்.

(17) ஊறு - தீங்கு. முரலல் ஆகும் - வண்டின் இசைபோல் ஒலிக்கும். நீள் துயில்......சிலபோதும் - தூங்கி எழுந்த என்னை மீண்டும் உடனே துயில்விக்கும்படியான இனிமைவாய்ந்த குரல்கள் சிலபோது என் காதருகு கேட்கும். கருவிகள் - இசைக் கருவிகள். கந்தரம் - மேகம். திரவியங்கள் - செல்வங்கள். காட்டுமாப்போல் - காட்டுவதுபோல. கனவுகாணக் கதறுவேன்-அவ்விதமே, மேகங்கள் என்மீது செல்வங்களைச் சொரிவதுபோல் மீண்டுங் கனவுகாண வேண்டுமென்று அழுவேன். கனவிலும் நினைவிலும் செல்வம் தம்மீது சொரிகின்ற எண்ணமே குடிகொண்டிருப்பது கீழ்மக்களின் குணங்களில் ஒன்று. இவ்வகையிலும் இவ் வுலகம்க்களிற் பலர் காலிபன்களே யாகுமாறு அறியலாம்.

**காலிபன்:**—அஞ்சாதே, அரவம் நிரம்பியது இத்தீவு—உவப்பித்தே ஊறுசெய்யா ஒலிகளும் இனிய இசைகளும் உள. கிணுகிணுக்கும் கருவிகளோராயிரம் சிலபோது என் செவியருகு முரலலாகும். நீள் துயில் உணர்ந்து நான் எழுந்தகாலையும் மீண்டுமென்னைத் துயில்விக்கும் குரல்கள் சிலபோது. பிறகு, கனவிலே, கந்தரங்கள் திறந்து என்மீது சொரிவதற்குச் சித்தமான திரவியங்களைக் காட்டுமாப்போல் நினைத்து யான் விழித்தபின் மீண்டுமக் கனவுகாணக் கதறுவேன் (17).

**ஸ்ட்டிபானோ:**—காசில்லாமல் சங்கீதம் கிடைக்கின்றது, எனக்குப் பலேபலே இராச்சியமாம் இது!

**காலிபன்:**—ப்ராஸ்ப்பீரோ அழிவுண்ட பிறகு—

**ஸ்ட்டிபானோ:**—போகப்போக ஆகட்டும்; உன் கதை என் நினைவில் இருக்கின்றது.

**ட்ரின்குலோ:**—ஒலி அகல்கின்றது; அதனைத் தொடர்வோம்; பிறகு நம் காரியத்தைச் செய்யலாம்.

**ஸ்ட்டிபானோ:**—விரூபியே, வழிகாட்டி நட; நாங்கள் பின்னே வருவோம். இந்தச் சிறுபறைக்காரனைப் பார்க்கவேண்டுமே என்று விரும்புகிறேன்—நன்றாக அடிக்கின்றானதை.

**ட்ரின்குலோ:**—(காலிபனுக்கு) வருவாயோ. ஸ்ட்டிபானோ, உன்பின் வருகின்றேன் (18).

[போகின்றார்]

**குறிப்பு:**—இந்நாடகத்தில் வருகின்ற மிக்க அழகிய பேச்சுக்களில் இது ஒன்று. காலிபன் இவ்வளவு நயமாகவும் இனிமையாகவும் பேசக்கூடுமோ என்பது வியப்பே. எனினும், அந்தத் தீவில் பயில்கின்ற இனிய இசைகள் காலிபனுடைய இதயத்தையும் ஓரளவு வயப்படுத்தியிருக்கின்றன போலும். ஆதலாற்றான் அதன் தன்மையை எடுத்துச் சொல்லும்போது அவன் மொழிகள் கவிச்சுவை பொருந்தி அமைகின்றன. ப்ராஸ்ப்பீரோவின் ஆவிகள் அவனது ஏவலால் காலிபனது காதருகு இசைக்கின்ற ஒலிகளே இவை ஆதல் வேண்டும். ப்ராஸ்ப்பீரோ, காலிபனது இதயத்தை இளகச்செய்து அவனை மென்மைப்படுத்தி நன்மனமுடையவனாக்குவதற்குச் செய்த நல்லஉபாயங்களில் இதுவொன்று என்ற எண்ண இடமிருக்கின்றது. முதலில் காலிபனுக்குக் கல்விகற்பித்து அன்பு காட்டினான். காலிபனோ தன் மதத்தின்பெருக்கினால் மிராண்டாவின் மானத்தைத் தீண்ட முயன்றான். ஆகையால் அம் மதம் குறையும்படி கட்டைசுமப்பதுபோன்ற கடின வேலை அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அச்சமே கீழ்களது ஆசாரம் என்னும்படி, அவ்வேலையை இவன் செய்யும்பொருட்டு இவனை அச்சுறுத்தப் ப்ராஸ்ப்பீரோவின் ஆவிகள் ஏவப்பட்டன. இதனோடு, அவன் மனம் பண்பட்டு நன்மையை நாடும்படி, இனிய இசைகள் அவன் செவியைச் சேர்வதற்கும் ப்ராஸ்ப்பீரோ அமைத்திருந்தான். காலிபனது இந்த நயமுடைய மொழிகளைக் கருதுங்கால், ப்ராஸ்ப்பீரோவின் நன்முயற்சி சிறிது பயன் காட்டியதென்றே எண்ணவேண்டும். ஆயினும் குடிகாரபட்லர் ஸ்ட்டிபானோ களத்தினுள்வந்து சேரவே, அம்முயற்சி முதிரமாட்டாமல் விளைகின்றது.

(18) காலிபன் உரைத்த ஏற்பாட்டின்படி ப்ராஸ்ப்பீரோவைக் கொல்லப்போவதை விட்டு ஸ்ட்டிபானோ, ஏரியலின் இசை போகின்ற வழியே தொடர்கின்றான். ட்ரின்குலோவும் அவனோடு சேரப் போகும்போது, ப்ராஸ்ப்பீரோவின் குகைக்குப் போகும் கருத்தே முதன்மையாயிருப்பது தவிர்ந்து இவர் வேறுவழி போவதுகண்டு தயங்கி நிற்கும் காலிபனை, 'வருவாயோ' என்று அழைக்கின்றான்.

**இரண்டாம் களம் முற்றிற்று.**

## நம்மாழ்வார் வைபவம்

### திருவாய்மொழி

[590-வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பத்து, 7-ம் தசகம்.

**அவதாரிகை:**—முன் தசகத்தின்படி, நம் ஆழ்வார் கிருஷ்ணவேஷம் பூண்டு ஒருவாறு அவனுடைய குணாதிசயங்களில் ஈடுபட்டிருந்தாலும், தமக்கு அவனது கலவி கிடைக்காமையால், "நான் விரஹதசையில் இவ்வளவு துயரப்பட்டும் அவனோ வாரா தொழிந்தனன்; அவனைச் சேர்வதற்கு அவனே உபாயமாகப் பணித்துள்ள 'நோன்பு' (அதாவது, கர்மயோகம்)' ஞானம் என்னும் இவ்விரண்டின் ஒன்றின் வழியாய்ப் பக்தியோகத்தை அடைவதற்கு நான்எத்தனிக்காமல் இருந்ததுதான் அவன் வாராததற்குக் காரணமாகும்' என்றுமதித்துமேல் இப்பாசுரத்தில்,தன்பாசுரத்தை ஏற்கும்படி வேண்டுகின்றார்.

---

1-ம் பாசுரம்.

நோற்ற நோன்பிலே னுண்ணறிவிலே னாகிலு
  மினியுன்னை விட்டொன்றும்
ஆற்ற கின்றிலே னரவினணை யம்மானே
சேற்றுத் தாமரை செந்நெ லூடுமலர்
  சிரீவர மங்கலநகர்
வீற்றிருந்தவெந்தா யுனக்குமிகையல்லே னங்கே.

**உரை:**—நோன்புகள் இல்லாவிட்டாலும் அதி ஆச்சரியமான இரஸ வஸ்துவான உன்னைவிட்டு வேறொன்றில் யான் ஆற்றியிருக்க மாட்டேன். சேஷசயனத்தில் உறங்குகின்ற என்ஸ்வாமியே,உன்னைத்தான் விட்டுஇருக்கஇயலாத என்னைப்போல்பவரை ஏற்றுக்கொள்ளவே அன்றோ நீ சிரீவரமங்கல நகரின்கண் எழுந்தருளியது. உனக்குஅடிமையான என் ஆன்மாவைத்தாயாகிய நீ போகவிட்டால் அந்த நஷ்டம் உன்னுடையது அல்லவோ! மகனாகிய நான் உன்னை அடுத்தால் அது உனக்குமிகையாகுமோ. ஆதலால், அடியேனை நீ போகவிட லாகாது. எந்தாய், நீ அவசியம் ஸ்வீகரித் தருளவேண்டும்.

**குறிப்பு:**—பின்னர், 11-ம் பாசுரத்தில், 'திருவிக்கிரமன் நாரணன்'என்று வருகின்ற அடைமொழிகளின் பிரயோஜனத்தைக் கண்டுகொள்க.

---

2-ம் பாசுரம்.

அங்குற்றே னல்லே னிங்குற்றே னல்லே
  னுன்னைக் காணு மவாவில் வீழ்ந்துநான்
எங்குற் றேனுமல்லே னிலங்கை செற்ற வம்மானே
திங்கள்சேர் மணிமாட நீடு சிரீவர மங்கல நகருறை
சங்கு சக்கரத்தாய் தமியேனுக் கருளாயே.

**குறிப்புக்கள்:**—அங்கு உற்றேன் அல்லேன் - பக்தியோகத்தை மேற்கொண்டு பூர்த்திசெய்து உன் இடமாகிய வைகுண்டத்தை விஹிதமாய் நான் அடையக்கடவேன் அல்லேன். இங்கு உற்றேன் அல்லேன் - சாதாரணஜனங்களைப்போல நானோ கர்மயோகமாகிய உபாயத்தை அநுஷ்டித்துப் பூர்த்திசெய்ய வல்லேன் அல்லேன். (ஏனென்றால்), உன்னைக் காணும் அவாவில் வீழ்ந்து நான் - உன்னை எப்பொழுதும் கண்டுகொண்டிருக்கவேண்டும் என்னும் ஆசையிலே அகப்பட்டு நான், எங்கு உற்றேனும் அல்லேன் - அந்த இரண்டு உபாயங்களில் எதனினும் இழிய மனம் தேறாதவனாயிருக்கின்றேன். சீதாபிராட்டியின் பொருட்டு இலங்கையை அழித்து அவளை விடுவிக்கவில்லையா? எனக்காகவன்றோ நீ சிரீவரமங்கைநகரில் கோவில்கொண்டது? உன்னையன்றி வேறெவ்வகை ஸஹாயமும் இல்லாத என்னுடைய பிரதிபந்தங்களையும், என்னிடம் உபாயம் ஒன்றும் எதிர்பார்க்காமலே நீ போக்கித் தரலாகாதா!



---

3-ம் பாசுரம்.

கருளப் புட்கொடி சக்கரப்படை வானநாட
  வெங்கார் முகில்வண்ணா
பொருளல் லாதவென்னைப் பொருளாக்கி
  யடிமை கொண்டாய்
தெருள்கொள் நான்மறை வல்லவர் பலர்வாழ்
  சிரீவர மங்கலநகர்க்
கருள்செய் திங்கிருந்தா யறியேனொரு கைம்மாறே.

**உரை:**—கருடனைக் கொடியாகவும் சக்கரத்தைப் படையாகவும் உடைய நீலமேக வர்ணனை பெருமானே, ஒரு பொருளாக மதிக்கக்கூடாத என்னை ஒரு பொருளாக்கி உன் தாஸ்ய கைகங்ரியத்தில் அமர்த்திக்கொண்டாய். ஞானம் நிறைந்திருக்கின்ற நான்கு வேதங்களும் கற்ற பிராமணர்கள் உன் கைங்கரியத்தில் அமர்ந்து சுகவாழ்வுபெற்ற சிரீவரமங்கை நகரில் அவர்களுக்கு அருள்செய்யக் கோவில்கொண்டாய். மேலும், எனக்காக நீ அங்கே தங்கி அனுக்கிரகம் செய்கிறாய். நீ செய்யும் இவ்வித நன்மைகளுக்குப் பதிலாக நான் உனக்குக் கொடுக்க யாதும் கைமுதல் இல்லாதவன். எனக்கு இதுவரையில் செய்திருக்கும் நன்மைகளுக்குப் பிரதிபலன் எதிர்பார்த்தோ நீ செய்தருளியது. அப்படி இல்லையே. இன்னமும் முன்போலேயே நிஷ்காரணமாய்ச் செய்தருள்வாய்.

---

4-ம் பாசுரம்.

மாறு சேர்படை நூற்றுவர் மங்கவோ
  ரைவர்க்கா யன்று மாயப்போர் பண்ணி
நீறுசெய்த வெந்தாய் நிலங்கீண்ட வம்மானே
தேறு ஞானத்தர் வேத வேள்வி
  யறாச் சிரீவர மங்கலநகர்
ஏறி வீற்றிருந்தா யுன்னையெங் கெய்தக் கூவுவனே.

**கருத்து:**—பாரதப்போரில் பல மாயங்கள் செய்து பாண்டவர்களுக்கு உபகாரம் புரிந்தீரே. நீரிலே அமிழ்ந்துபோன பூமியை வராகாவதாரம் எடுத்து மேலே கொண்டுவந்தீரே. இவர்களிடமிருந்து ஒருகைம்மாறு பெறவா நீர் உபகாரம் செய்தது? பக்தர்களைக் காக்க வேண்டுமென்ற நிமித்தத்தினாலன்றோ நீர் அவைகளைச் செய்தீர். பின் என்னையும் அவ்வாறே நீர் காக்கவேண்டாவோ—என்கிறார் நம் ஆழ்வார். அதற்குப் பகவான், "சிரீவரமங்கலநகரில் வேதவித்துக்கள் செய்யும் யாகத்தைக் காத்தளிக்க நாம்தான் அங்குவந்து வீறுதோன்றஎழுந்தருளி யிருக்கின்றோமே" என்று கூற, ஆழ்வார், "அது எனக்குந் தெரியும். ஆகையாற்றான், உன்னை யடையும்படி நான் இனி வேறு எங்குச் சென்று கூவுவேன். கூவினாலும் என்ன பயன்"—என்கிறார்.

**குறிப்பு:**—சிரீவரமங்கலநகரிலுள்ள எம்பெருமானை ஆழ்வார் இந்தத் தசகத்தில், ஆச்ரயித்தார். அடுத்த தசகத்தில், திருக்குடந்தையில் அமர்ந்த ஆராவமுதனை ஆச்ரயிக்கின்றார். அதற்குப் பின்னர், திருவல்லவாழ் திவ்விய க்ஷேத்திரத்தில் உள்ளவனை ஆச்ரயிக்கப்போகிறார். இப்படி க்ஷேத்திரங்களுக்குச் சென்று பெரும்பாடு பட்டாலும், அவ்விடங்களில் அர்ச்சாரூபியாயிருக்கும் பகவான், ஆழ்வாருக்கு ஒரு பதில் சொல்லவோ வேறே பலன்களைக்கொடுக்கவோ அமையாதபடியால் ஆழ்வார், "இனி க்ஷேத்திரங்களுக்குப் போவதனில் பிரயோஜனம் ஒன்றும் இல்லை" என்று மதித்து, சற்றுமுன் கூறியபடி, பகவான் ஸ்ரீ கிருஷ்ணனாய் அவதரித்ததை ஞாபகப்படுத்திக்கொண்டு, அந்த விபவ அவதாரத்தை, "பிறந்தவாறும்" என்னும் 5-ம் பத்து, 10-ம் தசகத்தில் அநுஸந்தித்து, அந்த அவதார திவ்விய சேஷ்டிதங்களை அநுபவித்து ஒருவாறு திருப்தியடைந்தவராகின்றார் என்பது அறியத்தக்கது.

---

5-ம் பாசுரம்.

எய்தக்கூவுத லாவதேயெனக் கெவ்வ தெவ்வத்
  துளாயுமாய் நின்று
கைதவங்கள் செய்யுங் கருமேனி யம்மானே
செய்த வேள்வியர் வையத் தேவராச்
  சீரீவர மங்கலநகர்
கைதொழ விருந்தா யதுநானுங் கண்டேனே.

**பதக்குறிப்புக்கள்:**-எவ்வ - எவ்வகைப்பட்ட, தெவ்வம் - பகைவர் கூட்டம். தெவ்வத்து உளாயுமாய் நின்று - உன் விஷயத்தில் விபரீதஞான முள்ளவர்களுக்கு நடுவே அவர்களுக்குத் தென்படாமல் நின்று. கைதவங்கள் செய்து - தமக்கு ஆகாததை நல்லதென்று நம்பித் தாங்களே தமக்குக் கேடு விளைவித்துக்கொள்ளும்படி கிருத்ருமங்கள் செய்து. பௌத்தாவதாரத்தில் பகவானே, அசுரசுபாவமுள்ளவர்களை வேதவிலக்கான அந்தப் பௌத்தமதத்தை அவலம்பிக்கும்படி செய்ததால் அவர்கள் கெடலாயினர் என்னும் கருத்துப்பற்றி ஆழ்வார் இங்கு இப்படிக் கூறுகின்றார். வையத் தேவர் - பூமியில் உள்ள தேவர் - பிராமணர். அறா - ஒருபோதும் நீங்காத. அது நானும் கண்டேன்-"வேதவேள்வியர்கள் தொழும்பொருட்டு நாம் அந்நகரில் நிற்கின்றதுபோன்றே நீயும் எமக்கு வழிபாடு செய்ய நிற்கின்றோம்" என்பது பகவான் கருத்தாயின், அதற்கு ஆழ்வார், "ஆம், அச்சேவை எனக்குந்தான் கிடைக்கின்றது, ஆயினும் அதுவோ எனக்குத் திருப்தி தராது" என்கிறார்.

**பொழிப்புரை:**—"பிரதிகூலர்க் கன்றோ, அவர்கள் நடுவே நீ புகுந்து இருந்தாலும் உன்னைக்காட்டிக்கொடுக்காமல் ஒழிவது? உன்னிடத்தில் ஆசைப்பட்டார்க்கும் அரியையோ? ஆனபின்பு, என்னுடைய அபேக்ஷிதத்தைச் செய்தருளாய். உம்முடைய அபேக்ஷிதம் பெறுகைக்கு உளதான உபாயத்தை நீர் செய்யலாகாதா என்னில், உன் திருவடிகளைக் கிட்டுகைக்கு

ஈடாயிருப்பதொரு உபாயம் என்னால் செய்யமுடியாது. இனித்தான் செய்யவேண்டுவது ஒன்றுண்டோ! 'என்னிடத்தில் வாசனையும் உருசியும் உள்ளவர்களாய் இருப்போர் எல்லார்க்கும் கண்ணாலே கண்டு அநுபவிக்கும்படி சிரீவரமங்கல நகரிலே புகுந்திருந்தோமிறே' என்று எம்பெருமான் கூற, "அது நானுங் கண்டேன், எனக்கு அது அமையாது" என்றார்—ஆறாயிரப்படி.

# அப்பர்

## அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்—30. வியாகரணம்

[594-வது பக்கத் தொடர்ச்சி]

(b) அப்பரும், 'செய்யும்' என்னும் வினைமுற்றும்.

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே

(நன்னூல் - 293)

என்றார் பவணந்தி; திணை பால் இடங்களுக்குப் பொதுவாமென விதித்த செய்யுமென் னெச்சம், அவ்வாறு பொதுவாமெனப் போந்தவற்றுட் சில பால்இடங்களிற் செல்லாது இம்முற்றுஎன்னும் கருத்தைநுதலி, இச்சூத்திரம் வரைந்தனர். ஆயினும், இச்சூத்திரம் பழுதற்றதெனக் கூறவிடமில்லை. இவர் இந்தப் பால் இடங்களை விலக்கவே, ஒழிந்த படர்க்கை நாற்பாலினுஞ் செல்லுமென்பது பெற்றாம். ஆயினும் பவணந்தி கூற்றின்வண்ணம் செய்யும் என்னும் முற்று, பல்லோர் படர்க்கை தன்மை முன்னிலைகளில் எக்காலத்திலும் செல்லாதென்பது இச்சூத்திரக் கருத்து. ஆசிரியர் தொல்காப்பியனார் அவ்வாறு நிகழ்காலத்தில் செல்லாதென்று கூறினாரே யன்றி, இறந்த காலத்திலும், எதிர்காலத்திலும் செல்லாதென்று கூறவில்லை:—

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
யவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச்
செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா

தொல் - வினையியல் 30

செய்யுமென்னும் வினைமுற்று,இறந்தகாலத்திலும், எதிர்காலத்திலும் வருவதில்லை யென்று உரைகூறல் பொருந்தாது. அப்பர்பாடியதேவாரத்தில்இவ்விரண்டு காலங்களிலும் செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்று வருவதைப் பின்வரும் பாசுரங்களிற் காணலாம்:—

அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மேவிப் பிறவியே.

கோயில் திருக்குறுந்தொகை 1.

துறக்கப்படாத வுடலைத் துறந்துவெந் தூதுவரோ
டிறப்பன்; இறந்தால் இருவிசும் பேறுவன்; ஏறிவந்து
பிறப்பன் பிறந்தாற் பிறையணி வார்சடைப் பிஞ்ஞ
[கன்பேர்
மறப்பன் கொலோவென் றென்னுள்ளங் கிடந்து
[மறுகிடுமே

தனித் திருவிருத்தம்—8.

ஆகையால், இறந்தகாலத்திலும் எதிர்காலத்திலும் வரக்கூடிய செய்யுமென்னும் வினைமுற்று, தன்மை முன்னிலை பல்லோர்படர்க்கையில் இவ்விடங்களில் வாராதெனச் சங்கப் புலவர்கள் யாரும் மொழிந்திலர். கீழ்வரும் அப்பர்பாசுரத்தில் வாசிப்புக் குறிகளின் திரிப்புச் சரியாயின் பல்லோர்படர்க்கையில் இறந்த காலத்தில் செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்றைக் காணவாம்:—

பந்தித்த பாவங்க ளம்மையிற்
செய்தன, இம்மை வந்து
சந்தித்த பின்னைச் சமழ்ப்பதென்
னே ?வந் தமரர் முன்னாள்
முந்திச் செழுமல ரிட்டு
முடிதாழ்த் தடிவணங்கும்;
நந்திக்கு முந்துற ஆட்செய்கி
லாவிட்ட நன்னெஞ்சமே!

—தனித் திருவிருத்தம் 4.

திருக்கழிப்பாலைத் திருத்தாண்டகத்தில்உள்ளசெய்யுள்களைநோக்கில், அதனிலுள்ள கீழ்வரும் அப்பர் பாசுரம் செய்யுமென்னும் வாய்பாட்டுவினைமுற்றைக் கொண்டு முடிகின்ற தன்றோ? அந்தப் பயனிலையின் எழுவாய் தன்மைப்பன்மை யன்றோ? அறிஞர்ஆராய்வாராக:—

ஊனுடுத்தி யொன்பது வாசல் வைத்து
வெள்ளெலும்பு தூணா வுரோம மேய்ந்து
தாமெடுத்த கூரை தவிரப் போவார்
தயக்கம் பலபடைத்தார் தாம ரையினார்
கானெடுத்து மாமயில்க ளாலுஞ் சோலைக்
கழிப்பாலை மேய கபாலப் பனார்
வானிடத்தை யூடறுத்து வல்லைச் செல்லும்
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே

திருக்கழிப்பாலை - திருத்தாண்டகம்

முன்னிலைப் பன்மை எழுவாய் செய்யுமென்னும் முற்றை பயனிலையாய்ப் பின்வரும் பாசுரத்தில் பெறவில்லையா வென்பதை ஆராய்க:—

அரக்க னீரைந் தலையுமோர் தாளினால்
நெருக்கி யூன்றிட் டான்தமர் நிற்கினும்
சுருக்கெ னாதங்குப் போமின்கண் மற்றுநீர்
சுருக்கெ னிற்சுட ரான்கழல் சூடுமே.

காலபாசத் திருக்குறுந்தொகை 11

ஆகையால் தொல்காப்பியனார் நிகழ்காலத்திற்கு மாத்திரம் வரையறுத்து இயற்றிய செய்யுமென்னும் முற்றின் விதியைப் பவணந்திமுனிவர் முக்காலத்திற்கும் வழங்கியது முன்னோர் ஆதாரமின்றிக் கூறியதென்பது திண்ணம். பவணந்திமுனிவர் காலம், தமிழில் "கேள்விமுறை யற்ற காலம்" என்பது நம்முடைய தேச சரித்திரத்தால் நன்கு வெளியாகின்றது. தமிழ் நாட்டில் உலகவழக்கில், இறந்தகாலத்திலும் எதிர்காலத்திலும்செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்கள்மூவிடத்திலும்வருவது கண்டும், அதன் இலக்கண விதியொழிபு நிகழ்காலத்திற்கு மாத்திரம் கூறியிருந்தும், பவணந்தி தானே நூதனவிதி உண்டாக்கியதன் காரணம் யாதோ அறிகிலோம்.



# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்— 8. சடாயு வுயிர்நீத்த படலம்.

[586-வது பக்கத் தொடர்ச்சி]

கவிதா நீதியைக் கைவரக் கோள்பவர்.

சிரமோரு பத்தும் கரங்கள் இருபதுஞ் சிந்தக்கண்டு சிரிக்குமாறு புரிமின் என்று சீதை சுனையையும் சிங்கத்தையும் வேண்டுவதுகேட்டு இராவணனே சிரித்தான் என்பாராய்க் கம்பர்—

என்றின்ன பலவும் பன்னி
யிரியலுற் றாற்று வாளைப்
பொன்றுன்னு புணர்மென் கொங்கைப்
பொலங்குழாய் போரி லென்னைக்
கொன்றுன்னை மீட்பார் கொல்லம்
மானிடர் கொள்க வென்னா
வன்றிண்கை யெறிந்து நக்கான்
வாழ்க்கைநாள் வறிது வீழ்வான்

[என்று இப்படிப் பல சொல்லி மனமுடைந்து கதறுபவளை நோக்கி, வாழ்நாள் வீணே அழியநின்ற இராவணன், "பொன் திணிந்த நெருங்கிய முலைகளையும் பொன்னாலாகிய குழைகளையும் உடையவளே, அந்த மானிடர் போரில் என்னைக்கொன்று உன்னை மீட்க வல்லவர்களோ, வல்லவராயின் மீட்டுக்கொள்ளட்டும்," என்று தன் வலிய திண்ணிய கைகளைக் கொட்டிச் சிரித்தான்]

எனத்தொடர்கின்றார். மாதர்க்குரியபேதைமை யுடையளேனும், சீதை வேண்டுங்கால் வெல்லரிய வாதங்கள் வழங்கவும் வல்லவள். இராவணன் தன்னுடை இருபது கரங்களின் ஆற்றலை முன் விளம்பியபோது, அதற்கெதிர் பரசுராமன்வரை மேன்மேல் நவின்று அவன் வாயை அங்கு மடக்கியவாங்கே, இங்கும்

வாக்கினா லன்னான் சொல்ல
மாயையால் வஞ்ச மானென்
றாக்கினா யாக்கி யுன்னை
யாருயி ருண்ணுங் கூற்றைப்
போக்கினாய் புகுந்து கொண்டு
போகின்றாய் பொருது நின்னைக்
காக்குமா காண்டி யாயின்
கடவலுன் றேரை யென்றாள்

[வாயளவிலே இராவணன் அவ்வாறு சொல்ல, சீதை, "வஞ்சனையால் ஒரு மாயமானை உண்டாக்கி, உன் அருமையான உயிரைக் கொல்லநிற்கும் எமன் அன்ன இராமனை இவ்விடத்தினின்றும் போக்கினாய். பிறகு கள்வனைப் போல் புகுந்து என்னைக் கொண்டுபோகின்றாய். இராமனோடுபொருது உன்னைக் காத்துக்கொள்ளும் வகை அறிவாயானால் உன் தேரைச் செலுத்தாதே—என்றாள்]

"என்னைக்கொன் றுன்னை மீட்பார்கொல் அம்மானுடர்" என்று வாயே வீரமிது பேசுகின்றதாயினும் அஞ்சியது அவன் நெஞ்சு என்ற உண்மையை அவன் செய்த வஞ்சனைகளால் எடுத்துக்காட்டியது மன்றி, அவன் விளம்பிய வீரத்தைச் சோதிக்கும்படி 'கடவல் உன் தேரை' என்றவள்,

மீட்டுமொன் றுரைசெய் வாணீ
வீரனேல் விரைவின் மற்றுன்
கூட்டரா மரக்கர் தம்மைக்
கொன்றுங்கை கொங்கை மூக்கும்
வாட்டினார் வனத்தி லுள்ளார்
மானிட ரென்ற வார்த்தை
கேட்டுமிம் மாயஞ் செய்த
தச்சத்தின் கிளர்ச்சி யன்றோ

[மறுபடியும் ஒன்று சொல்வாள்—நீ வீரனானால், உன் இனத்தவராகிய அரக்கரை விரைவில் கொன்று உன் தங்கையின் கொங்கையையும் மூக்கையும் சிதைத்தவர் காட்டிலுள்ள மனிதரே என்ற வார்த்தையைக் கேட்டும் அவர்களை எதிர்த்துப் போர்செய்யாமல், இந்த மாயம்செய்யப் புகுந்தது உனக்கு அவர்களிடத்திலிருக்கும் அச்சத்தின் மிகுதியன்றோ]

என்றனள். இதற்கு விடை, முன்னரே மாரீசனோடு பேசியபோது பழகியுளதாதலின் இராவணனுக்கு இப்பொழுது ஆயத்தமாயுளது—

மொழிதரு மளவி னங்கை
கேளிது முரணில் யாக்கை
இழிதரு மனித ரோடே
யான்செரு வேற்ப லென்றால்
விழிதரு நெற்றி யான்றன்
வெள்ளிவெற் பெடுத்த தோட்குப்
பழிதரு மதனிற் சாலப்
பயன்றரு வஞ்ச மென்றான்

[அன்னவாறு சீதை சொன்னவளவிலே இராவணன், "பெண்ணே, இது கேள் - வலியற்ற உடலுடைய இழிவான மனிதரோடுநான் போர்செய்யச் சம்மதிப்பேனாயின், கண்ணுடையநெற்றியுடைய சிவபிரானது வெள்ளிமலையைப் பெயர்த்தெடுத்த என் தோள்களுக்குப் பழி உண்டாகும். ஆதலின், வஞ்சனையே மிக்க பயனுடையதாம்—என்றான்]

அச்சமோ தனக்கில்லை எனக்காட்டுதற்கு இக்காரணம் அடுக்கும். வீணே தான் மாயமானாகி மாயாமல் இராவணனையே முதலில் மாய்விக்கச் சூழ்ந்த மாமன் மாரீசன், "சானகியைக் கொள்ளத்தான் கொள்வாயேல் வஞ்சனையாற் கொள்ளாமல் நின் வீரந்தெரிய இராமனை வென்றேகொள்" என்று தூண்டியபோது, "இராமன் இறந்தக்கால் சீதையுந் தமியளாய்த் துயர்பட்டு இறப்பாளாதலின், மாயையின் அவளைக் கொள்வோம்" என்று அங்குரைத்த மாற்றத்தை இங்குச் சீதைக்கு இவன் நேரே இயம்புவது அமையாதாதலின்,"ஒப்பழி வென்றே போர்செய லொல்லேன்" என்று மாரீசனுக்கு முதலில் கேளாமுன்னம் விளம்பிய காரணத்தையே இப்பொழுது தன் உதவிக் கழைத்துக் கொள்வானாயினான். ஆயினும் பொய்யொன்று சொல்லிச் சீதையை வார்த்தையால் வஞ்சிப்பதென்பதோ எந்நாளும் இல்லை. பேதையரில் இவள்போல் நுண்ணறிவுடையார் காண்டலரிது. தவசியாய் வந்த இராவணன் தான் இலங்கையில் தங்கியதற்கு அமைதிகாட்ட முயன்று முயன்று இறுதியில் சீதையின் கேள்விகளுக்கு எதிர்நிற்கமாட்டாமல் சாலச்சீற்றமே கொண்டு முடிந்தான். இப்பொழுதும், வீரம் பழுதாகுமென்று மானிடனாவா னொருவனுடன் பொர நினைத்திலன் என்றலும்,

பாவையு மதனைக் கேளாத்
　　தங்குலப் பகைஞர் தம்பாற்
போவது குற்றம் வாளிற்
　　பொருவது நாணம் போலாம்
ஆவது கற்பி னாரை
　　வஞ்சிக்கு மாற்ற லேயாம்
ஏவமென் பழிதா னென்னை
　　யிரக்கமில் லரக்கர்க் கென்றாள்

[சீதையும் அவ்வார்த்தையைக் கேட்டு, "தம் குலத்துப் பகைவர்களோடு போர்செய்யப் போவது குற்றமாம், வாளினால் அவர்களை எதிர்ப்பது நாணமாம். எனின், தனக்கு இருக்கும் ஆற்றலெல்லாம் கற்புடைய மாதரை வஞ்சிக்கும் ஆற்றலேயாம். இரக்கமற்ற அரக்கர்களுக்கு அவமானமேது, பழியேது—என்று பரிகசித்தாள்]

ஏவம் இல்லை, இனி இவ் விரக்கமில் அரக்கனுக்கு நாவுமில்லை. அவன் உள்ளத்திற் கனன்ற காமக்கனலை யுங் கடந்துசென்று சுட்டிருத்தல் வேண்டுமிச்சொல். இச்சொல்லின் வீச்சினெதிர் இராவணனது பேச்சின் வீரமெல்லாம் பூனைவீ என்னப் பிய்ப்புண்டுபோகவில்லையேல் மானமென்பது என்றுங் கண்டறியா ஈனனே யன்றி அவன் வேறல்லன்.

இப்படி இராவணன் வாயை இறுகப் பூட்டினாள் சீதை யென்பது என்! இவளுக்கு இத்திறத்தில் இந்நிருதன் ஒரு பொருளில்லை. 'செல்லுஞ் சொல் வல்லான்' எனப் பெயரெடுத்த இராமனே இவள் சொற்களுக்கு எதிர்நிற்க வாற்றாமல் ஓய்ந்து அவள்வழியே இணங்க வேண்டி நேர்ந்ததை அவன் காட்டிற்குப் புறப்பட்ட நாள் இன்று புறங்கூறும். காடுறை கொடுமைக்கெல்லாம் அம்மெல்லியல் ஆளாகவொல்லாதெனும் பரிவினால் அவளை நகர்க்கண் இறுத்த முயன்ற இராமன், "அழல் பொங்கும் கானகத்தை மிதிப்பதற் கமைந்தனவல்ல நின் கால்கள், ஆதலின், வாரல்" என்றுரைத்த காரணத்தை, "நின் பிரிவினுஞ் சுடுமோ பெருங் காடு" என்ற ஒரு சிறு வாசகத்தால் இவள் அணைத்துவிடவே, அவள்பொருட்டு நில்லாளேல் தன்பொருட்டேனும் நிற்றல் வேண்டுமெனற்குரிய வேறோர் காரணத்தால் அவளை விலக்கநினைத்து, "விளைவு உன்னுவாய் அல்லை, போத அமைந்தனை, ஆதலின், எல்லையற்ற இடர் தருவாய்" என்று

கொற்ற வன்னது கூறலுங் கோகிலஞ்
செற்ற தன்ன குதலையள் சீறுவாள்
உற்று நின்ற துயரமி தொன்றுமே
ஏற்று றந்தபி னின்பங்கொ லாமென்றாள்

[இராமன் அப்படிச் சொன்னவுடன், குயிலைவென்ற குதலைச்சொற்களைப் பேசுகின்ற சீதை கோபித்து, 'உனக்கு நேர்ந்துள்ள துன்பம் என்னோடு இருப்பது என்பது ஒன்று மட்டுமேயோ! என்னைத் துறந்து சென்றபின் எல்லாம் உனக்கு இன்பந்தான் போலும்]

என்று எதிர் எடுத்துக்காட்டியதற்குப் பின்னுமோர் பதிலுரைத்து அவளைத் தடுப்பதற்கு ஆயிரம் இராமர் பற்றமாட்டார். அந்தவொரு நாவன்மைதான் சீதையை இன்று இங்குக் கொணர்ந்து நிறுத்தியிருக்கின்றது. இராமனைத் தன் வன்மைமிகுந்த மெல்லிய உரையால் வாயடங்கச்செய்து கானகத் துடன்தொடர்வதொரு காரியத்தைச் சாதித்தாளானாலும், அதனால் எல்லையில் இடர்களைத் தானும்பட்டு இராமனுக்குந் தருகின்றதன்மையை நோக்குங்கால் இறுதியில் அன்று இராமன் சொன்ன சொல்லே சென்றது என்னல் வேண்டும். அந்நாள் சீதை காட்டிய திறமையே இற்றைக்கு அவளை இராவணன் கையில் காட்டிக் கொடுத்தது போலாம். "சாதுர்யம் இருப்பவர்க்கு இருக்கட்டும், நீயோ நல்லவளாயிரு" (Let those who will be clever, be thou good) என்று ஓர் மாதினைநோக்கி அறிவுறுத்திய அவ் வாங்கிலப் புலவரின் கொள்கை சீதைக்குத் தெரிந்திருக்குமாயின் ஒருகால் அவளுக்கு இப்பேரிடர் இன்று நேராமற் காக்கப்பெற்றிருக்கலாம். இராமனைச் சொல்லால் வென்று தன் கருத்தினைச் சாதித்துக்கொண்டதன் நோக்கம் அவனை விட்டுப்பிரியத்தரியா அவள் உள்ளத்தில் உழைத்தவோர் கரையிலாப் பெருங்காதலே என்பதில் ஐயமில்லை. ஆயினும், கொழுநன் உரையைக் குறுக்கிட்ட பிழையே இன்று இராவணனாக இவளைக் கொண்டு செல்கின்றது. குற்றமில்லா விடத்துத் துன்பமும் இல்லையாகையால், நாடக முறையில், நேர்கின்ற துன்பத்திற்கு வித்தாய வோர் குற்றம் இருந்தே தீரவேண்டும். இதனை ஆங்கில நூலாராய்ச்சிவாணர் 'கவிதாநீதி' (Poetic Justice) என்பர். பண்டைய கிரீக் நாடக ஆசிரியர்களும் ஷேக்ஸ்பியரும் இக் கவிதாநீதியைக் கடவாமற் காப்பார். கம்பரும் அப்படியே. அத்துணைச் சிறியகுற்றத்திற்கு இத்துணைப் பெரிய துயர் பயப்பது நீதியாகுமோ என்று கேட்கவேண்டா. குற்றத்தின் தன்மை செய்கையின் அளவினதன்று, செய்தவர் அளவேயாம். உயர்ந்தோர் உயர்விற்கிணங்க அவர் செய்தசெய்கையின் குற்றமும் அதனால்விளையும் துன்பமும் பெரியனவாகும். 'தூமத் தார்குழல் தூமொழிச் சீதை' என வழங்கும் கம்பர்தம் சீதைக்கு, "எற்றுறந்தபின் இன்பங்கொல்" என்னுமவ் வேழைச்சொல்லும் பிழையாய்ப் நிற்கப் போதியதாயிற்று. வான்மீகத்தில் வந்த சீதையோ, தனக் கிடரிழைத்தாளென்று கைகேசியை அமயம் நேர்ந்த விடமெல்லாம், அவள் வடமொழி மாமி கௌசலையேபோல், தூற்றுதற்குக்கூசாதநாவினளாதலின், அடவிக்கு அகல்கின்ற அதே நிலையில்தன் கணவனைநோக்கி, "இராமரே, என்னை உடன்கொண்டு ஏகிராகில், விதேகவம்சத்தில் பிறந்தவராயும் மிதிலையின் மன்னவராயும் இருக்கும்என துதந்தையார் தங்களைப் பெண்ணின் தன்மையும் புருஷ வேஷமும் உடையவராகநிச்சயிக்கமாட்டாரா" என்று ஏசுமளவு இழிந்து பழிபட வுரைக்கவேண்டியவளாயினள். அந்தச்சீதை துன்பமுற அத்துணைக் குற்றம் வேண்டியது கவிதாநீதி. இலக்குவனை, 'என்னயல் நிற்றியோ ஒருநீ' என்றதும் ஒருவகையில் கவிதா நீதிக்கு இயன்றதாயினும், இது அயல் நிகழ்ச்சி, அது தூரகாரணம்.

எனினும், சீதை சொன்ன அச்சொல்லின் விளைவின் மறுபுறத்தையும் இங்குக் கருதுதல் நேரிதாம். இராவணன்றன் எஞ்சிய மூன்றரைகோடி ஆயுளுக்குங் கூற்றாய் நின்றது, திருநகர் தீருமாறு இவ்வனிதை அன்று இராமனுக்குரைத்த அச்சொல். இஃதவள் அன்றுரைத்து இராமன் வாயை வென்றிளலாயின், கைகேசியின் சூழ்ச்சிமாத்திரம் எஞ்சுமேயல்லது விண்ணவர் செய்த தவமெலாம் பயனற்றுப்போயிருக்கும். ஆதலின் இராவணன்றன் கூற்றத்தை அங்குச் சீதைபகர்ந்த கூற்றினுள் காணலாம். இவன் உயிரைத் துடைக்கவேசொன்னா ளச்சொல். இன்று அவனுயிர் போகாமுன்னம் மானத்தை வேருடன் துடைத்தொழிக்க, "ஆவது கற்பினாரை வஞ்சிக்கும் ஆற்றலேயோ" என்னும் சொல் அவ்வகைத் திறமையேகொண்டு வந்தது.



இன்னதற்கு இராவணன் விடையளிக்கஇயலாமை வெளிப்படை. மற்று, அவனொன்று முயன்றுரைக்க நேரமும் இல்லை. ஏனெனில்,

என்னுமவ் வேலை யின்க
　　ணெங்கடா போவ தென்னா
நின்னிலென் றிடித்த சொல்ல
　　னெருப்பிடைப் பரப்புங் கண்ணன்
மின்னென விளங்கும் வீரத்
　　துண்டத்தன் மேரு வென்னும்
பொன்னெடுங் குன்றம் வானின்
　　வருவதே போலு மெய்யான்

[என்று சீதை சொல்லும் சமயத்தில், 'அடா நீ எங்குச் செல்கின்றாய், நில்நில்' என்று இடிபோன்று அதட்டுகின்ற சொற்களை யுடையவனும், கோபமென்னும் நெருப்பை அவ்விடங்களிலெல்லாம் பரப்பும் கண்களையுடையவனும், மின்னல்போல் விளங்குகின்றதும் வீரம் பொருந்தியதும் ஆன மூக்கை உடையவனும், மேரு என்னும், அப்பெரிய பொன்மலையானது வானத்தில் வருவதே போன்ற தோற்றமுடைய உடலையுடையவனும்]

ஆகிய எருவையின் மன்னனும் சடாயுவைக் கம்பர் களத்தினுள் கொணர்ந்துவிடுகின்றார். வருமவன்,

பாழிவன் கிரிக ளெல்லாம்
　　பறித்தெழுந் தொன்றோ டொன்று
பூழியி னுதிர விண்ணிற்
　　புடையுறக் கிளர்ந்து பொங்கி
ஆழியு முலகு மொன்றா
　　யழிதர முழுதும் வீசும்
ஊழிவெங் காற்றி தென்ன
　　விருசிறை யூதை மோத

[பெரிய வலிய மலைகள் எல்லாம் பூமியினின்று பிடுங்கப்பெற்று மேலேயெழுந்து ஒன்றோடொன்று இடித்துக் கொண்டு பொடியாய் உதிரவும், ஆகாயத்தை அளாவிப் பொங்கி எழுந்து கடலும் உலகும் ஒன்றுபட்டு அழியும் படியும், எங்கும் வீசுகின்ற கொடிய ஊழிக்காற்று என்னும்படி இரண்டு சிறகுகளினின்றும் காற்று வீசவும்]

சாகைவன் தலையொடு மரமுந் தாழமேல்
மேகமும் விண்ணின்மீச் செல்ல மீமிசை
மாகவெங் கலுழனும் வருகின் றானென
நாகமும் படமொளித் தொதுங்கி நையவே

[கிளைகளுடைய வலிய தலைகளோடு மரங்கள் சாயவும், மேலுள்ள மேகங்களும் வானத்தின் மேன்மேல் உயர்ந்து போகவும், ஆகாயத்தில் வலிய கருடனும் வருவதென்று ஆதிசேடனும் படங்களை அடக்கி ஒளிந்துகொண்டு தளரவும்.]

யானையும் யாளியும் முதல யாவையும்
கானொடு மரத்தொடு தூறு கல்லிவை
மேனிறைந் திருசிறை வீச்சி னேறலால்
வானமுங் கானமு மாறு கொள்ளவே

[யானைகள் யாளிகள் முதலிய எல்லா மிருகங்களும், மரம் புதர் கல் ஆகிய இவைகளும் அவைகள் இருந்த காட்டினோடு, இரு சிறகுகள் வீசுங் காற்றினால் நிலைபெயர்ந்து மேல் ஏறுவதால், வானமும் கானமும் மாறாடவும்]

உத்தமன் றேவியை யுலகொ டோங்குதேர்
வைத்தனை யேகுவ தெங்கு வானினோ
டித்தனை திசையையு மறைப்பெ னீண்டெனாப்
பத்திரச் சிறைகளை விரிக்கும் பண்பினான்

[உத்தமனான இராமனது மனைவியை நிலத்தோடு பெயர்த்தெடுத்து உயர்ந்த தேரில் வைத்துக்கொண்டு நீ எங்குப்போவது. ஆகாயமுடன் எல்லாத் திசைகளையும்இதோ நான் மறைத்துவிடுவேன்" என்று தன் வலிய சிறகுகளை விரிக்கும் தன்மையை உடையவனும்]

வந்தன னெருவையின் மன்னன் மாண்பிலான்
எந்திரத் தேர்செல வொழிக்கு மெண்ணினான்
சிந்துரக் கால்சிரஞ் செக்கர் சூடிய
கந்தரக் கைலையை நிகர்க்குங் காட்சியான்

[தீயவனான இராவணனது எந்திரத்தேர் செல்லாவகைத் தடுத்துவிடும் எண்ணம் உடையவனும், சிந்தூரம்போன்ற கால்களையும் தலையையும் செவ்வானம்போன்ற கழுத்தையுமுடைய கைலைமலையை ஒக்கும் தோற்றமுடையவனும் ஆன, கழுகுகளுக்கு அரசனாகிய சடாய வந்து தோன்றினான்.]

நாடகநவிற்சிக் கிணங்க எருவைவேந்தன் களத்தினுள் புகுந்தவிதம் இது. வலிமையும் வேகமும் இவ்வரவில் அதிகம் இருக்கின்றதாயினும் கதழ்வது காற்றிலாதலின் வல்லோசை யதிகமின்றி மென்மையே மிகுதிகொண்டு இச் செய்யுள்கள் வழவழவென முடுகுகின்றன. மலைகளும் மரங்களும் கடலும் தம் நிலைநின்று பறிபட இப் பெரும்புள் பறந்த வன்மைக்கு இழுக்கின்றியே மென்கணங்களால் யாப்பது எளியதன்று. வன்மையும் வீச்சும் வேகமும் யாவும் செறிதரும் இச்செலவு காற்றில் நிகழ அவைகளைமட்டுங் காட்டி, வல்லின இடறலைக் கம்பர் நீக்கினார். இப்படியே வந்த தாடகை நடந்தது தரையிலாதலால்,

சிலம்புகள்சி லம்பிடைசெ றித்தகழ லோடு
நிலம்புகமி தித்தனணெ ளித்தகுழி வேலைச்
சலம்புகவ னற்றறுக ணந்தகனு மஞ்சிப்
பிலம்புக நிலக்கிரிகள் பின்றொடர வந்தாள்

என்றும், அவ்வாறே பரசுராமனது வருகையை இயம்பும்போது,

பாழிப்புய முயர்திக்கிடை யடையப் புடைபடரச்
சூழிச்சடை முடிவிண்டொட வயல்வெண்மதி
ஆழிப்புனலெரிகானில மாகாயமுமழியும்[தோற்ற
ஊழிக்கடை முடிவிற்றிரி யுமைகேள்வனை யொப்ப

வந்தான் எனவும் செய்யுள்கள் வல்லினத்தின் வகை தெரிந்து விரைவும் வன்மையும் இடறலும் தோன்ற நடக்கக் காணலாம்.

இன்னவாறு தானே வந்தனன் அருணன் செம்மலாம் எருவைக் கிறைவன். வான்மீகத்தில் இருந்த வண்ணம் இச்சடாயு "சிறிது தூங்கிக்கொண்டிருக்க" சீதைதான் வழியில் அதனைக்கண்டு எழுப்பி, "ஐயா, ஜடாயுவே, ஓ பெரியவரே, என்னைப் பாருங்கள்! என்னை அநாதைபோலக் கொடிய அரக்கன் இரக்கமின்றித் தூக்கிக்கொண்டு போகின்றானே! வெகு பலமுடையவனும் ஆயுதந்தரித்தவனுமாகிய இக்கொடிய அரக்கனைத் தடுக்கத் தங்களால் முடியாது. என்னை இவன் தூக்கிக்கொண்டு போகின்ற சமாசாரத்தை ஒன்றும் விடாமல் தாங்கள் கண்டதைக் கண்டபடி இராமரிடத்திலும் லக்ஷ்மணரிடத்திலும் சொல்லவேண்டும்" என்ன அவள் வேண்டிக்கொள்ளும்வரையில் இப்பறவை காத்துக்கொண்டிருக்கவில்லை. இங்குச் சடாயு செவிலித்தாயெனத் தூங்கிக்கிடக்காமல், 'ஆய்மையின் மந்திரத் தறிஞனும்எனச் சேய்மையின் நோக்குறு சிறுகணான்" என்றதிற்கிணங்கத் தானே,

ஆண்டுற் றவணங் கினையஞ் சலெனாத்
தீண்டுற் றிலனென் றுணர்சிந் தையினான்

மூண்டுற் றெழுவெங் கதமுற் றிலனல்
மீண்டுற் றுரையா டலைமே யினனல்

[இவ்வாறு அவ்விடத்தில் வந்து, சீதையை நோக்கி அஞ்சாதே என்று சொல்லி, இராவணன் அவளைத் தீண்டவில்லை என்பதை உணர்ந்த மனத்தை யுடையவனாய், பொங்கி எழுந்த தன் மிகுந்தகோபத்தை முதிரவிடாமல், சிறிது தணித்து மீண்டும் சில வார்த்தைகளைச் சொல்வானாயினன்]

வாழி, இந்தக் கழுகின் வேந்தன். தீண்டாத கற்புடையசெழுந்திருவை இவ்வரக்கன் தீண்டினனல்லன் என்றது கண்டு உள்ளந்தேறிய இது, தன்பொருட்டு மாத்திரமன்றி நம்மனோர் இதயங்கள் அனைத்தையும் தன் பெரிய மார்பினுள் தாங்கிக் கூச்சம் சிறிதுகுறைய விட்டதோர் நெட்டுயிர்ப்பேயாம். யாவதாயினும் எமதன்னையைத் தீண்டுவதா என்னுமோர் சீற்றம் எழுவதன்முன், பிறர்பொருட் டெய்தும் பயிர்ப்பினால் தம் மயிர்க்கால் தோறும் காய்ச்சிய ஊசிகள் ஏறுவது போல் அங்கம் கூசிக் கூசிக் குலைந்து அவசமுற்றவர்களாகாதார் நெஞ்சம் வலியரே. இவ்வாறாக, இராவணன், "சீதையை அவளுடைய கூந்தலை இடக்கையாலும் துடைகளை வலக்கையாலும் பிடித்துத் தூக்கினான்... தூக்கி அவளைப் பயமுறுத்தித் தன் மடியில் வைத்துக்கொண்டு இரதத்தின்மீது ஏறினான்" என்று வான்மீகமுனிவர் இயம்புமளவில், "எவரும் பழியும் பாரா இரக்கமில் ஓர் அரக்கனுக்கும்" இதுமிகை என்று விதிர்விதிர்ப்பதுடன், இராவணன்தான் அன்னது செய்தானேனும்,இவ்வடநூன்முனிவர் அதனை இயம்பாதொழிந்தாராயின்,யாரும் அவர்பால் பொய்யுடைய குறை காணமாட்டார் என்பதும் நிச்சயம். படுகொலை முதலிய மிகக் கொடுஞ் செயல்களைக் களத்தினுள் காட்டலாகாதென்பது கிரேக்க நாடகவிதிகளில்லொன்று. வான்மீகர் நூல் கிரீக்குமில்லை நாடகமும் அன்றுதான்; ஆயினும், படுகொலையினும் பதினாயிரமடங்கு கொடியதாகிய இந்தக் காரியம் வடமொழியினும் கிளத்தற்குரியதன்று. ஆதலாற்றான்,இராவணன் சீதையை இன்றி, அவள் கூந்தலின் நிழலையும் துடையின் நிழலையும் பற்றி யெடுத்து அவள்தன் சாயையையே தன் மடியில் வைத்துக்கொண்டனன் என ஆரியர்தம் ஸ்காந்தபுராணம் உரைத்தது. சீதையைப் பற்றி வான்மீகம் இங்குச் சொல்லியதெல்லாம் அவளுடைய சாயையைப்பற்றியே கூறப்பட்டிருக்கின்றனவென்பது, அந்நூலிற்கு உரைகண்ட திலகர்தம் வியாக்கியானத்தின் கொள்கையெனக் கருதுவாரும் உளர். மாயையில்வல்ல இராவணன் இறுதியில் ஒரு சாயையேகொண் டேகினான் எனின் அவன் விதியின் விளையாட்டினும் மதியின் வஞ்சனையே அதிகமும் ஆச்சரியமாயிருக்கும். சனகன்பெற்றஅன்னத்தைஅவன்தன் பாழுங் கைகளால் பற்றித் தன் பாவியுடலோடு படக்கொண் டேகுகின்றான் என்பது கேட்போர் உணர்வு அவலமுற்று ஆகொடிது என அழியுமாயின், அதற்கெதிர், அவன் சீதையின் சாயையையேபற்றிச் சென்றனன் எனின், அங்கிலையின் அவலச்சுவை அத்தனையும் கெட்டுப் பின்னர்க் கதையின் நடையே மரத்துவிடும். ஆதலின் கம்பர், சீதையின் பயிர்ப்பினோடு நம் உணர்வின் உயிரையும் காக்குமாறு,இராவணன்மேல் கீழுற ஒருயோசனை மண்ணைச் சுமக்கும்வகை செய்தார். அதற்குக் காரணமாகி நின்ற இராவணன்றன் பண்டைச் சாபத்தையும் இங்கு நினைப்பூட்டியதும் முறைமையே. அண்ணல் சடாயுவேபோல், "தீண்டுற்றிலன் என்றுணர் சிந்தையினால்" முன் வான்மீகராமாயணத்தில் கண்டபோது மூண்டிருக்கவேண்டிய வெஞ்சினத்தைத் தமிழின் தென்றலால் யாவரும் சிறிது ஆற்றிக்கொள்ள இயலும். "இராவணன்மேல் சிறிதும் அன்பில்லாத வளாதலால் தன்னை அவன் கையினின்று விடுவிக்கச் சீதை பெரிதும் முயன்றாள்" என்று நமக்கு அறிவுறுத்துகின்ற வான்மீகமுனிவர், அன்புதான் அவள் ஓரளவேனும் இராவணன்பால் வைத்தாளோ என்று அயரிக்கவல்லார் சிலர் உளர் போலும் கருதி அன்னவரைத் தேற்றுவதும் வேண்டுமென்று இது செப்பினர் எனச் சிந்திக்கப்படுவதற்குரியராய் நிற்கின்றனர். சீதை தன்னை இராவணன் கைகளினின்று விடுவித்துக்கொள்ள முயன்றமைக்கு அவன்பால் அன்பில்லாமை காரணம் என்று காட்ட நினைப்பதே, காகுத்தன் கற்பினாள் பெருமைக்கு அடுக்காது. காரணம் கூறுவதால் இழிவுசெய்கின்ற நிலைமைகளில் இதுவொன்று. நிருதன் செய்த காரியத்திலும் முனிவர் காரணம் கூறவந்த இது கேட்போர் உணர்வை உறுத்தி உறுத்திச் சோர்விக்கும்.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

| டானிக்குகள் : | |
|---|---|
| பாதாமி லேகியம் | ரூ. 3-0-0 |
| ரதிவல்லப லேகியம் | 2-0-0 |
| மஹா திராக்ஷாதி லேகியம் | 2-0-0 |
| குழந்தைகளுக்கு | |
| ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை | 0-4-0 |
| பால சஞ்சீவினி | 0-4-0 |
| பால ஸுதா (டானிக்) | 1-0-0 |

| தைலங்கள்: | |
|---|---|
| சந்தனாதி 6 அவுன்ஸ் | ரூ. 1-0-0 |
| அமிர்தாமலக ,, | 0-12-0 |
| பிருங்காமலக ,, | 0-12-0 |
| ஸ்திரீகளுக்கு | |
| ஸுதக டானிக் | 2-0-0 |
| கர்ப்பாசய டானிக் | 2-0-0 |
| ப்ரஸவ லேகியம் | 1-8-0 |

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
நஞ்சன்கூடு பல்பொடி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது)
காஸ்ட்ராலகஸ்
ஜவரேக்
[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]




# பொதிகை நிகண்டு

## (இரண்டாம் பகுதி)

[595-வது பக்கத் தொடர்ச்சி]

மா

1900 மாசு குற்றமு மழுக்கு மற்பமும்
மழையு மேகமும் வகுத்தனர் புலவர்.

1901 மாசி மகமும் மாதமு மாகும்.

1902 மாஞ்சி யனுமனு மருந்தும் பெண்களும்.

1903 மாடு சீதனமும் பெண்ணும் பக்கமும்
மணியுஞ் செல்வமு நிரையும் வெற்றியும்.

1904 மாடகம் யாழு முறுக்கா ணியுமாம்.

1905 மாட முழுந்து மில்லு மாகும்.

1906 மாட்சி திருத்தமு [1] நன்மையு மாகும்.

1907 மாணி பிரம சாரியும் வனிதையும்.

1908 மாதவந் தவமும் வசந்தமுங் கள்ளும்.

1909 மாதர் பெண்ணு மழகுங் காதலும்
இடைச்சொல்லு மெனவே யியம்ப லாகும்.

1910 மாதங்கம் யானையு முவருங் கடலும்
இளமையு மெனவே யிசைத்தனர் புலவர்.

1911 மாதிரந் திசையும் வானமும் பூமியும்
மலையும் யானையும் வகுத்தனர் புலவர்.

1912 மாந்தல் வீதலுங் குடித்தலு முண்டலும்.

1913 மாபெலி யசுரனும் பூசையு மாணிலையும்.

1914 மாயை வஞ்சனையுஞ் சத்தியு மாகும்.

1915 மாய்வு மறைவுஞ் சாவு மாகும்.

1916 மாயம் பொய்யும் கருமையும் வஞ்சமும்.

1917 மாருதி யனுமனும் வாயுவும் வீமனும்.

1918 மாரி மேகமும் நோயும் வடுகியும்
கள்ளு மழையும் மரணமுங் கழறுவர்.

1919 மாலதி சாதியு மல்லிகையு மாகும்.

1920 மாலை யல்லு மியலு மொழுக்கமும்
பொன்னாதி மாலையும் பூமா லையுமாம்.

1921 மாலங் குங்குமமும் பேயு மாகும்.

1922 மாலே புதனும் பெருமையு மரியும்
மயக்கமும் நீரும் வரையு மாசையும்
சோழனுங் காற்றும் போகியும் பழமையும்
எணியுங் கருமையு மேகமும் பொற்பும்
கண்குத் தியுமெனக் கழறினர் புலவர்.

1923 மாலர் புலையரும் வேடருங் கவசமும்.

1924 மாலி யிரவியும் கள்ளு மாகும்.

1925 மாழை யேருந் திரட்சியு மடமையும்
ஆயமு மோலையு முலோகக் கட்டியும்
ஏழமும் புளிமா வும்மிசைத் தனரே.

1926 மாற்கஞ் சமயமும் வீதியும் வழியு
மறுதலை யுரையும் வழங்க லாகும்.

1927 மானம் விமானமும் பெருமையுங் குற்றமும்
அளவு மிலச்சையு மாகு மென்பர்.

1928 மானி மாதருங் காதலு மாகும்.

1929 மானுத லிலச்சையு மயக்கமு மொப்பும்.

1930 மானே யுழையு மகர ராசியும்
வல்விலங் கின்பெயர்ப் பொதுவு மாகும்.

1931 மானவர் மனிதரு[2] மாண்மையுள் ளோருமாம்.

1932 மாவே தருவுங் கருமையுஞ் செல்வமும்
வண்டுமா வுடையு மிருகமு மானியும்
மாத்தருவும் நிறமும் [3] பீடு மொண்மையும்
வாசியு மேரும் வெறுப்பு மழைத்தலும்
என்மாவுந் திருவு நிலமு மாகும்.

மி

1933 மிக்கவை ஞாய மன்மையும் அடிசிலும்
நிறைதலு மூணு நிகழ்த்த லாகும்.

1934 மிகை வேதனையுந் துக்கமு மாகும்.

1935 மிச்சி லொழிபொருளு மெச்சிலு மாகும்.

1936 மிசையேடு முணவு மீமிசைச் சொல்லும்.

1937 மிச்சை பொய்த்தலு மஞ்ஞானமு மிடிதலும்.

1938 மிஞ்சு வண்டு மிகுதியு மாகும்.

1939 மிடலே மதனும் வலியு மதியும்.

1940 மிதவை சோறுந் தெப்பமு மாகும்.

1941 மிழற்றல் சொல்லு நிரம்பா மென்சொலும்.

1942 மிளைகாவற் காடு[4] மரணமு மாகும்.

மீ

1943 மீக்கூற்று கீர்த்தியுஞ் சொல்லின் செலவும்.

1944 மீளி திண்ணியனும் வலியும் மேன்மகனும்
பீடுங் கூற்றும் பூமனு மாகும்.

1945 மீன்விண் மீனுஞ் சித்திரையு மீனும்.

(பிரதி) [1] நற்குற்றமு மாசியும் - மானமு மமைதியு மொப்பு மாகும்.

(பிரதி) [2] மாண்மையு மாகும். [3] பீடு மோணவையும். [4] மானமு.

---

# மலர் வனம்

## தீயினுள் திங்கள்

**வரைவிடைவைத்துப்** பெருமகன் பிரியப் பிறையெனும் நுதலவள் அருந்துயர் படுவாள் தோழியையுற்றுத் தங்நிலை யுண்மை தெரியத் தேர்ந்த பருவரல், அந்தோ கொடிதெனக் கருதுவீர்—இதனைக் கேண்மின்,

தொல்கவின் தொலைந்து தோணலஞ் சாஅய்
அல்ல னெஞ்சமோ டல்கலுந் துஞ்சாது
பசலை யாகி விளிவது கொல்லோ
வெண்குருகு நரலுந் தண்கமழ் கானல்
பூமலி பொதும்பர் நன்மலர் மயக்கி
விலங்கு திரை யுடைதருந் துறைவனொ
டிலங்கெயிறு தோன்ற நக்கதன் பயனே.

[வெண்ணிறமுடைய நாரைகள் கத்துகின்ற குளிர்ந்த கானலில் வாசனை பொருந்திய பூக்கள் நிறைந்த சோலையின்கண் நல்ல நெய்தல் முதலிய நீர்ப்பூக்களைச் சிதைத்து வந்து மாறிமாறி யுலவும் அலைகள் உடைந்து மறியும் கடல் துறைவனோடு முன்பு நாம் ஒளிவிளங்கும் பற்கள்தோன்ற நகைத்து விளையாடியதன் பயனோ இப்பொழுது எமது பழைய அழகு கெடவும், தோளின் வனப்புச் சிதையவும், துன்பம் பொருந்திய உள்ளத்தோடு ஒருநாளுந் துயில்கொள்ளாமல் மேனியெங்கும் பசப்பு ஊரவும் இவ்வாறு நாம் சாதலேதான்]

சிரித்துக் கெட்டேன் என்பதன் பரிபவம் சாலப் பெரிது. எனினும், பிரிந்திவளைப் போனவனேனும், பிரிந்த நாளில் இவள்படும் வருத்தத்திடையே இன்பம் பயப்பது அச் சிரிப்பினை நினைத்த துன்பமே கண்டீர். தலைவனது இயற்பழித்த தோழியை நோக்கி, "நம் காதலர்பால் கொடுமை தோன்றுமேல், அது திங்களுள் தீ தோன்றியற்று" எனத் தேற்றினாள் வேறோர் தலைமகள். திங்களுள் தீயோ தோன்றற் கில்லை. ஆதலின் இம்மெல்லியல் நங்கை இங்கு, பிரிவெனும் தன் தீயினுள், முன்னே நக்க நினைவெனுந் திங்களைத் தவழக்கொணர்ந்து தணிகின்றாள். துன்பத்தினுட் டுன்பம் பண்டைய இன்பத்தின் நினைவாமென, மேலுற நோக்குவார்க்குத் தோன்றலாமெனினும், துன்பத்தினுள் துன்பமாமிதுவே துன்பினது இன்ப மாகும். இன்பத்தை இன்பமாக்கொளல் யார்க்கும் இயலும். துன்பத்தை இன்பமா மாற்றிக்கொள்வார் வித்தகர். மற்று, தீயினுள் திங்களைக் கொணரவல்லார் காதலுடைய நல்லார்களே.

KALANILAYAM REG. NO. M. 2324.

# வர்த்தமானம்

**வேலைக்கு ஓர் வழி** :-வட இந்தியாவில் இருக்கின்ற ஓர் ஜமீன்தார் இக்காலத்திற்கு அவசியமானவோர் உண்மையாய உதவியைச் செய்ய முன்வந்திருப்பது மிகவும் பாராட்டற்குரியது. வேலை வாய்க்காமல் வருந்துகின்றவர்கள் அவரிடம் வந்துகேட்டுக்கொண்டால், ஒவ்வொருவருக்குச்சுமார் மூன்றுஏகர்வீதம், 1200 ஏகர் நிலத்தினைப் பகிர்ந்து கொடுத்துக்கொண்டு வருகின்றார். அதனைப்பெற்றுக்கொள்பவர் மூன்றுவருடகாலம் வரையில் வாரம் ஒன்றும் செலுத்துவதின்றியே நிலத்தினை அனுபவித்துக்கொள்ளலாம். அதன்பின், அவ்வந்த நிலத்தின் தகுதிக்குத் தக்கப்படி வாரம் சிறிது விதிக்கப்படும். கொடுக்கப்படுகின்ற நிலங்களும் நல்ல வளப்பம் வாய்ந்தவை.

உதவிகளிலெல்லாம் மிகச் சிறந்த உதவியிது. இந்த முறையினால் இப்பொழுது நானூறு குடும்பங்கள், பழுதில்லாப் பணியும் செய்து, பிழைக்கும். "வேலையில்லாத் திண்டாட்டம்" என்று வீணிற்குப் பேசிப் பேசி, அதன் காரணங்களை ஆராய்வதிலும், அதனைப் போக்குவதற்கு இன்னும் பலவிதமான புதுப்புது தொழிற்சாலைகளை உடனே நிறுவ முயலவேண்டுமென்று முழங்கிக்கொண்டிருப்பதிலும் வீணாகக் காலத்தைக் கழித்து, வருந்துவோர் வருத்தத்தைக் காப்பதின்றியே, தீர்கின்ற வஞ்சனையை விட்டு, இந்தச் ஜமீந்தார்போல் செல்வவந்தவர்களா யிருப்பவர், வேலையில்லாமல்துயர்படுகின்றவர்களுக்குத் தம்நிலங்களைப் பகிர்ந்துகொடுக்க இசைவார்களாயின் இக்காலத்துயரின் பெரும்பகுதி முடிந்துவிடும். வறுமை குறைவதுடன், இன்னும் வியாபர உத்தியோகங்களால் வரும் பலவித தீமைகளும் தணியும். இந்த ஏற்பாடே மெல்லமெல்ல, பண்டைநாட் பெருமைக்கு இணங்க, இந்தியர்தம் வாழ்க்கையின் முறையாக மாறவும் மாறலாம்.

இது, பொதுவுடைமைப் பிரசாரமன்று. பொதுவுடைமை நினைவு பொறுமையால் எழுகின்றது. அது ஏழைகளின் முறையீடு, நாம் சொல்வது பெருந்தன்மையின் உபகாரம். பிற்றைக் காலமெல்லாம், இல்லையே என்று ஒருவரும் ஏங்கியிருக்க வேண்டா. திருவள்ளுவர் விழைந்தபடி நிலமென்னும் நல்லாள் நகையும், இளிவரலின்றி, உவகையாய் மாறிவிடும்.

* * *

பத்திரிகை வியாபாரம் :—"இப்பொழுது நமது நாட்டில் வர்த்தமானப் பத்திரிகை வியாபாரம் பெருகி வருகின்றது. இந்தப் பத்திரிகைகளை நடத்துவோர் பத்திரிகைத் தொழிலில் வெற்றியுற மருந்துவியாபாரமும் கூட இருக்கவேண்டுமாம். அப்பொழுதுதான் பத்திரிகைகள் வளருமாம். பத்திரிகை வளர்ச்சியில் நாட்டின் முன்னேற்றம் அடங்கியிருக்கின்றது. பெண்கள் முன்னேறுவார்கள். பிரஜா உற்பத்தித்தடைகையாளவிரும்புவதும், அதனால் வியாபாரமும், வருமானமும் செழித்தோங்கும். சென்னையிலே மாத்திரம் அநேக விகடப்பத்திரிகைகள் மருந்து வியாபாரத்தின் துணைகொண்டு வெகுதூரம் மக்களை முன்னேற்றி வருகின்றன. இனிச் சுயராச்சியம் சிறிது தூரந்தான்" என்று ஒரு தேசபக்தர் கூறினார்.

* * *

புத்தக வரவு:—புதுக்கோட்டை ஸ்டேட்டி இள்ள ராயவரம் வாசியும், கந்திப் பாடசாலை மானேஜருமாகிய ஸ்ரீமான் S. K. T. கதிரேசன் செட்டியார் அவர்களால் இயற்றப்பட்ட, புதியமாதிரிப் பெருக்கல் வாய்பாடு, கணிதச் சுவடி, வட்டிக் கணித விளக்கம், என்னும் மூன்று புத்தகங்களும் வரப் பெற்றோம். ஒவ்வொன்றின் விலை 2 அணா. சுருக்கு வழியில் பெருக்கல் முதலியன செய்வதற்கும், வட்டித் தொகையை விரைவில் கணக்கிட்டுக்கொள்வதற்கும், கூட்டல் முதலியவைகள் செய்துவந்த தொகையைச் சரிபார்ப்பதற்கும், இன்னும் இவை போன்ற கணக்குப் பார்ப்பதை எளியதாக்குவதற்கும் இவை கற்றுத்தரும் முறைகள் மிகவும் உபயோகமானவை. பாடசாலை மாணவர்கள் அனைவரையும் இம்முறையில் பழக்கிவைப்பது மிகவும் நலமாம். வர்த்தகர்களுக்கு இப் புத்தகப் பயிற்சி நல்ல கைத்துணையாகும். ஏனையோர்களும் இச் சிறிய புத்தகங்களைத் தம்பருகே வைத்திருந்துஉபயோகப்படுத்திவருவாராயின் தங்கள் வீட்டுப் பால் தயிர் கணக்குக்கள் பார்க்க நேரும்போது, இப்பொழுது, ஒருதாம் வந்ததொகை மறுதாம் வாராமல் தவிக்கின்ற தவிப்பினின்று தப்புவார்கள்.


**NATIONAL INSURANCE COMPANY, LIMITED.**

**Head Office :**

**NATIONAL INSURANCE BUILDING, 7, Council House Street, Calcutta.**

| | |
|---|---|
| New Business Completed During 1932 ... | ... Rs. 1,55,66,720 |
| Out of a business of | ... Rs. 1,96,70,000 received in proposals. |

Life Assurance is security { for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.

| | |
|---|---|
| Claims paid over | ... Rs. 1,00,00,000 |
| Total Assets exceed | ... Rs. 1,90,00,000 |

For Terms & Conditions apply to:—

T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

**FIRE & ACCIDENT RISKS covered by NATIONAL FIRE AND GENERAL INSURANCE COMPANY Ltd., NATIONAL INSURANCE BUILDING, 7, Council House Street, Calcutta**

For Terms & Conditions apply to:—

T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*



அமிர்தசாகரம்

தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய

**ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்**

அமிர்தசாகரம் போன்றவை.

| | |
|---|---|
| 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு | ரூ. 1 0 0 |
| 5 டப்பிகள் | ரூ. 4 0 0 |

இனம்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி இனம்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம், 26, பிராட்வே, மதராஸ்.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)